பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 6 வெள்ளிக்கிழமை (22-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:360






ஈ.பி.டி.பி. தலைமையகம் முன்பாக நேற்று கொட்டும் மழைக்கு மத்தியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோரில் மாணவர்கள் சிலரையும் பாதுகாப்புக்காக அங்கு நிறுத்தப்பட்டிருந்த பொலீஸாரில் சிலரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:அற்புதன்)*

### யாழ்நகரில் ஸ்ரீதர் தியேட்டரில் உள்ள

# ஈ.பி.டி.பி. தலைமையகம் முன் நூற்றுக்கணக்கானோர் மறியல்!

## சாவகச்சேரியில் புதன் நள்ளிரவு

## ஈ.பி.டி.பி. அலுவலகம்மீது பெற்றோல் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம்,நவ.22

சாவகச்சேரி நுணாவில் சந்திக்குச் சமீபமாக உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகம் மீது புதன் கிழமை நள்ளிரவு இனந்தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்க முயன்றனர் என்றும் -

அங்கு கடமையிலிருந்த பொலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி அவர்களை விரட்டினர் என்றும் - கூறப்படுகின்றது.

நள்ளிரவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை.

ஈ.பி.டி.பி. அமைப்பு இச்சம்பவம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கடற்படை சிலவாரங்கள் பணியில்!

### பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு

நெடுந்தீவில் சட்டம், ஒழுங்கு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் பொலீஸாரையும் கடற்படையினரையும் மேலும் சில வாரங்களுக்கு அங்கு வைத்திருக்க ஏற்பாடு செய்யும்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு கடிதம்மூலம் பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று பொலீஸ்மா அதிபருக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

### வீதியைத் திறப்பதற்கு வசதியாக

## புதிய படை நிலைகளை அமைக்க நிதி இல்லை!

### இராணுவதந்தரப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

பருத்தித்துறை - நாகர்கோயில் வீதியைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறப்பதற்கு முன்பாக படைநிலைகளை மீளமைப்புச் செய்யவேண்டியுள்ளது. இந்தப் பணிக்கு நிதிவசதி இல்லை என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - நாகர்கோயில் வீதியைத் திறப்பது தொடர்பாக ஆராய்வதற்காக பாதுகாப்பு உப-குழுவால்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவம்பர்22

**குடாநாட்டில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் மற்றொரு நிகழ்வாக நேற்று அந்த அமைப்பின் யாழ்.மாவட்ட தலைமையகத்தின் முன்பாக பெரும் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.**

**ஸ்ரீதர் தியேட்டரில் உள்ள தலைமையகத்துக்கு வெளியே நூற்றுக்கணக்கானோர் கொட்டும் மழைக்கு மத்தியில் திரண்டு நின்று 'ஈ.பி.டி.பியே வெளியேறு!' என்று கோஷம் எழுப்பினர்.**

தீவகத்தில் நெடுந்தீவில் போய் தரையிறங்கி நிலைகொண்டிருக்கும் ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து வெளியேறுமாறுகோரி நெடுந்தீவு மக்கள் நடத்திவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் -

குடாநாட்டில் தங்கியுள்ள ஈ.பி.டி.பியினர் அனைவரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று கோரியும் பல்கலைக்கழக மாணவர்களின்

(14ஆம் பக்கம் பார்க்க)

### நெடுந்தீவில் உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.22

நெடுந்தீவில் தரையிறங்கிய ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து வெளியேறுமாறு கோரி கடந்த ஆறு தினங்களாக அங்கு மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மக்கள் இன்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கின்றனர்.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. முகாமுக்கு அருகே சந்தைப்பகுதியில் இன்று உண்ணாவிரதப் போர் தொடங்கும். இதற்கென அங்கு விசேட கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ)

### பிரபாவின் உரையை ரூபவாஹினி ஒளிபரப்பும்!

கொழும்பு,நவ.22

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வேபிரபாகரன் எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நாளை ஒட்டி ஆற்றவிருக்கும் விசேட உரை இந்த முறை அரச தொலைக் காட்சியான ரூபவாஹினியிலும் ஒளிபரப்பப்படவுள்ளது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோ மாநாட்டில் மூன்று அமர்வுகள்

### வடக்கு-கிழக்கு பேச்சில் மட்டும் புலிகள்

கொழும்பு,நவ.22

நோர்வேத் தலைநகரம் ஒஸ்லோவில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் சமாதான ஆதரவு மாநாட்டில் மூன்று அமர்வுகள் நடைபெறும். அவற்றில் வடக்கு - கிழக்கு குறித்த விடயங்கள் பேசப்படும்போது விடுதலைப் புலிகள் இயக்கம் கலந்துகொள்ளும்.

அவர்கள் கலந்துகொள்ள வேண்டிய அவசியத்தின் நடைமுறை தன்மையை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

ஒஸ்லோ மாநாட்டில் புலிகள் இயக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் கொடியேற்றலுடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.22

தமிழீழ மாவீரர் எழுச்சி வாரம் நேற்று தேசியக் கொடியேற்றலுடன் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது.

மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் தேசியக் கொடியேற்றல், சுடரேற்றல், அகவணக்கம், மலர்வணக்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற வைபவத்தில் தமிழீழ மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழரசி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மியாமி விமான நிலையத்தில் இலங்கைப் பயணி கைதானார்

### பயணப் பொதிக்குள் இறைச்சிவெட்டும் கருவி

மியாமி,நவ.22

புளோரிடாவில் உள்ள மியாமி சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு சோதனை நிலையத்தில் கடந்த திங்கள் அன்று இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் கையில் எடுத்துச்சென்ற பொதியில் இறச்சி வெட்டும் கருவியொன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதால் அவர் கைதானார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கசாப்புக் கடையில் பயன்படுத்தப்படுவது போன்ற இக்கருவி, ஒருசெய்தித்தாளில் சுற்றப்பட்டு இருந்ததை விமான நிலய நுழைவாயில் எக்ஸ்ரே கருவி காட்டியதாகவும் பொலீஸார் கூறினர்.

ஜேசப் ஜார்வன்ஸ் அல்மெய்தா (வயது 29) என்பவருக்கு அது சொந்தமானது எனவும், நியூயோர்க்கிற்கான விமானத்தில் அவர் ஏறவிருந்தார் எனவும் பின்னர் ஜேர்மனிக்குப் பயணம் செய்யவிருந்தார் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

அக்கருவிய அவர் எதற்காக வைத்திருந்தார் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. களவாக ஆயுதம் ஒன்றைக் கொண்டு சென்றார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

(ஐ)

## இத்தாலி செல்லவிருந்த 58 பேர் கைது!

சட்டவிரோதமாக படகில் வெளிநாடு செல்வதற்காக தென்னிலங்கைக்குச் சென்றிருந்த 58 பேர் மாத்தறை, தெவுந்தரையில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அங்கு சனசமூக நிலையம் ஒன்றில் தங்கியிருந்த இவர்கள், நேற்று முன்தினம் இரவு பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். கடல்வழியாக இத்தாலிக்குச் செல்ல எண்ணியிருந்ததாக அவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

சிலாபம், கண்டி, மொறட்டுவை, கிளிநொச்சி, பிலியந்தலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருந்தனர்.

(ஐ)

## நாட்டின் சமாதானச் சூழ்நிலையை உலகுக்குக் காட்ட வருகிறது இசைக்குழு!

### வெளிநாட்டு ரசிகர்களும் படையெடுப்பார்கள்

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தவும இலங்கையில் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் மேலும வலியுறுத்தவும் உலகப் பிரபல்யம் பெற்ற 'யு.பி. 40' என்னும் இசைக் குழுவினர் டிசெம்பர் 14 ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர். வர்த்தக, நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று அவரது அமைச்சில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இருபது வருடங்களாக நிம்மதியின்றி வாழ்ந்த இலங்கை மக்களின் வாழ்வில் சமாதானமும் அமைதியும் கிட்டியுள்ளன என்ற நம்பிக்கையை உணர்வுபூர்வமாக தங்களின் இசை மூலம் அவர்கள் வெளிப்படுத்துவார்கள்.

இந்த இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக பல ஆயிரக்கணக்கான ரசிகர்கள், சிங்கப்பூர், கொங்கொங், தாய்லாந்து, மலேசியா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும் வருகை தரவுள்ளனர்.

- இவ்வாறு அமைச்சர் மேலும் சொன்னார்.

(ஐ)

# ஓஸ்லோ சமாதான ஆதரவு மாநாட்டில் இந்தியாவும்!

## நோர்வேயில் உள்ள தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி புதுடில்லி அரசுடன் தொடர்பு என்று பீரிஸ் தகவல்

கொழும்பு,நவம்பர்22

**நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இம்மாதம் 25 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உதவி வழாங்கும் நாடுகளின் மாநாட்டில் (புதிய பெயர் ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாடு) இந்தியா பங்குபற்றுமா இல்லையா என்பது குறித்து உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை.**

**ஆயினும், பங்கு பற்றுவது தொடர்பாக நோர்வேயில் உள்ள இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி புதுடில்லி அரசுடன் தொடர்புகொண்டு வருகிறார் என்று அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாட்டில் பங்கு பற்றுவது தொடர்பாக இந்தியா இன்னமும் ஆராய்ந்து வருவதாகவும், அம்மாநாட்டில் இந்தியா பங்குபற்றாது என்று வெளியான தகவல் முற்றிலும் தவறானது எனவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.

இம்மாநாடு தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து முரண்பாடான செய்திகள் வெளியாகிவருவதற்கும் அமைச்சரின் இந்தத் தகவலுக்கும் மத்தியில் அரசின் இரு அமைச்சர்கள் இந்தியத் தலைவர்களைச் சந்திக்க நேற்று அங்கு சென்றுள்ளனர்.

துறைமுக அபிவிருத்தி, கப்பல் துறை, முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று அதிகாலை இந்தியா சென்றுள்ளார். பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று மாலை இந்தியா பயணமானார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது எனக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

ஒஸ்லோ மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பாக நோர்வேக்கான இந்தியத்தூதுவர் கோபால்கிருஷ்ணகாந்தி புதுடில்லியுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடி வருகிறார். இந்தியத் தலைவர்கள் இது குறித்து பரிசீலனை செய்கிறார்கள். இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இதனை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அதேவேளை, இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ள 20 கோடி டொலர் கடனைத் திருப்பி வழங்க வேண்டிய கால எல்லையை இந்தியா 20 ஆண்டுகளால் நீடித்திருக்கிறது. கடனுக்கான 10 வீதம் முன்கொடுப்பனவையும் ரத்துச்செய்துவிட்டது.

- இவ்வாறு அவர் கூறினார்.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீமும், மிலிந்த மொறகொடவும் சமாதானப் பேச்சுக்களில் காணப்படும் முன்னேற்றங்கள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவிடம் எடுத்துக் கூறுவார்கள்.

முஸ்லிம்களின் பார்வையில் சமாதானப் பேச்சுக்கள் குறித்த கருத்துக்களையும் அமைச்சர் ஹக்கீம் இந்திய வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பில் பரிமாறிக்கொள்ளவிருக்கின்றார்.

அமைச்சர் ஹக்கீம் இவ்விஜயத்தின்போது இந்திய கப்பல்துறை அமைச்சரை புதுடில்லியில் சந்தித்து இலங்கை - இந்திய கப்பல் சேவை தொடர்பான பேச்சுக்களிலும் ஈடுபடுவார்.

(ஐ-12)

## 82 ஆம் ஆண்டு முதல் 2002 செப்.வரை 17, 648 விடுதலைப் புலிகள் வீரச்சாவு!

விடுதலைப் போராட்டத்தில் 82 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை மொத்தம் 17 ஆயிரத்து 648 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இவர்களில் 13 ஆயிரத்து 882 பேர் ஆண் போராளிகளாவர். 3 ஆயிரத்து 766 பேர் பெண் போராளிகள். 241 கரும்புலிகளும் இதில் உள்ளடங்குவர்.

மாவட்ட ரீதியாக எண்ணிக்கை வருமாறு:-

யாழ்.மாவட்டம்: 6 ஆயிரத்து 487 போராளிகள், இவர்களில் 125 பேர் கரும்புலிகள். மட்டக்களப்பு, அம்பாறை: 4 ஆயிரத்து 535 போராளிகள். 47 பேர் கரும்புலிகள். வன்னி: 2 ஆயிரத்து 521 போராளிகள். 22 பேர் கரும்புலிகள், திருகோணமலை: ஆயிரத்து 479 போராளிகள், 16 பேர் கரும்புலிகள். முல்லைத்தீவு: ஆயிரத்து 291 போராளிகள். 10 பேர் கரும்புலிகள். மன்னார் ஆயிரத்து 37 போராளிகள். 15 பேர் கரும்புலிகள்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் 297 போராளிகள். அவர்களில் 6 பேர் கரும்புலிகள். இவர்களுக்கு மேலதிகமாக 30.09.2002 இற்குப் பின் 10 பேரளவில் வீரச்சாவடைந்துள்ளனர் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

## அமைச்சர் மிலிந்த களுத்துறை சென்று கைதிகள் நிலை குறித்து ஆராய்வு

### மன்னார் ஆயர், பேர்னாட் உடன் சென்றனர்

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் இன்றைய நிலை குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முற்பகல் அங்கு நேரில் சென்று ஆராய்ந்தார்.

சிறச்சாலை அதிகாரிகளுடனும் பின்னர் கைதிகளுடனும் அமைச்சர் மொறகொட நிலைமைகள் தொடர்பாக சந்திப்புக்களை மேற்கொண்டார். கைதிகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை அமைச்சர் அவர்களிடம் விளக்கிக்கூறினார்.

மன்னார் ஆஜர் அதிவண, இராயப்பு ஜோசப், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி பாலித சில்வா ஆகியோரும் அமைச்சருடன் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தனர்.

களுத்துறைச் சிறைக்கைதிகள் கடந்த மாதம் உண்ணவிரதம் மேற்கொண்டிருந்த பொழுது அமைச்சர் மொறகொடவும் ஏனையோரும் அங்கு சென்று கைதிகளுடன் பேச்சு நடத்தி உறுதி மொழிகளை வழங்கியிருந்தனர் என்பது தெரிந்ததே.

குற்றச்சாட்டுகள் இல்லாத கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பது குறித்தும், குற்றச்சாட்டுகள் உள்ளோர் மீது வழக்குகள் தாக்கல் செய்வது குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது.

## நயினாதீவில் புலிகளின் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

நயினாதீவில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற திறப்புவிழாவில் மாவீரர் சேதுவின் தந்தையாரான லோகநாதன் அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் கொடியை ஏற்றினார். நயினாதீவுப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ஐ)

## மழை தொடர்கிறது

குடாநாட்டில் பருவமழை தொடர்கிறது. நேற்றுக் காலை முதல் பரவலாகப் பெய்த மழை காரணமாக தாழ்ந்த பகுதிகளில் வெள்ளநிலை ஏற்பட்டது.

வலிகாமம் பகுதிகளில் வெள்ள நிலை ஏற்பட்டதால் சில்லாலை, பனிப்புலம், உயரப்புலம் பகுதிகளிலிருந்து சிலகுடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளன.

(ஐ-10-17-135-139)







கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று தேசியக் கொடி ஏற்றப்பட்ட நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்:அற்புதன்)

### உலகின் மிக உயரமான

# எவரெஸ்டின் பெயரை மாற்ற சீனா முயற்சி

பீஜிங்,நவ.22

இமயமலையின் 'எவரெஸ்ட்' சிகரத்தின் பெயரை மாற்றுவதற்கு சீனா முயற்சி செய்துவருவதாகக் கூறப்படுகின்றது.

உலகிலேயே உயரமான இமயமலை இந்தியா - சீனா(திபெத்) -நேபாளம் ஆகிய 3 நாடுகளுக்கும் மத்தியிலுள்ளது. இமயமலையிலுள்ள உலகின் மிகயுயர்ந்த சிகரமான 'எவரெஸ்டு'க்குச் செல்லும் வழி நேபாளம் திபெத் எல்லையிலுள்ளது.

'எவரெஸ்ட்' சிகரத்தை முதன் முதலாகக் கண்டுபிடித்தவர் இந்திய நில அளவைத்திணைக்கள ஜெனரல் ஜார்ஜ் எவரெஸ்ட். இவர்தான் 1840 இல் முதன்முதலாக இமயமலையின் உயரத்தை அளந்தார். இவர் பெயர் தான் எவரெஸ்ட்டு சிகரத்துக்குச் சூட்டப்பட்டது.

இப்போது இந்தப் பெயரை மாற்றும் முயற்சியில் சீனா இறங்கியுள்ளது.

இமயமலை சிகரத்துக்கு 'எவரெஸ்ட்' என்ற பெயரைச் சூட்டும் அளவுக்கு ஜார்ஜ் எவரெஸ்ட் தகுதியானவர் இல்லை என்று பீஜிங் பல்கலைக்கழக புவியியல் அறிஞர் லின் சாவோ 1958ஆம் ஆண்டு கூறியிருந்தார்.

திபெத்தியர்கள்தான் முதன்முதலாக எவரெஸ்ட் சிகரத்தைக் கண்டுபிடித்தனர் என்றும் லின் சாகோ கூறியிருந்தார்.

எவரெஸ்ட் சிகரத்துக்கு திபெத்தியர்கள் 'கி யோமோ லாங்மா' என்று பெயர் சூட்டியிருந்தனர். எவரெஸ்ட் என்று பெயர் சூட்டப்பட்ட பிறகு, இந்தப் பெயர் வெளியுலகத்துக்குத் தெரியாமல் போய்விட்டது.

இப்போது திபெத் சீன அறிஞர், எவரெஸ்ட் பெயரை மாற்றிவிட்டு திபெத்திய பெயரை வைக்கவேண்டும் என்று போராடி வருகிறார்கள்.

கி யோமோ லாங்மா என்ற திபெத்திய சொல்லுக்கு பூமித்தாய் என்று பொருள்.

திபெத்திய பெயரை 'எவரெஸ்ட்' சிகரத்துக்கு சூட்டி திபெத்தியர்களுக்கு மேற்கத்திய உலகம் மரியாதை தரவேண்டும் என்று திபெத்திய அறிஞர் கெலெக் கூறியிருக்கிறார். முன்பு தனி நாடாக இருந்த திபெத், மாசே துங் ஆட்சிக் காலத்தில் சீனாவின் ஒரு மாகாணமாக மாறிவிட்டது. (ம)

# தற்கொலைத் தாக்குதலில் ஜெருசலேமில் 11 பேர் பலி!



மீட்புப் பணிகள் இடம்பெறுகின்றன.

ஜெருசேலம்,நவ.22

இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள ஜெருசலேம் நகரில் நேற்று அதிகாலை பயணிகள் பஸ்மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர்; 40 பேர் காயமடைந்தனர்.

மேற்கு ஜெருசலேம் பகுதியிலுள்ள கிர்யட் மெனாச்சம் என்ற இடத்திலிருந்து நகரின் மத்திய பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸே தாக்குதலுக்கு இலக்கானது. இந்த பஸ் அப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கான சேவையிலும் ஈடுபட்டிருந்ததால் பாதிக்கப்பட்டவர்களில் பலர் மாணவர்கள் என்று கூறப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்த 8 பேரின் நிலை மிக மோசமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

காலை 7 மணிக்கு சற்றுப் பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். பலஸ்தீன ஆயுதப் படைகளைச் சேர்ந்த தற்கொலையாளி ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதலால் பஸ்ஸின் கண்ணாடிகள் அனைத்தும் சுக்குநூறாகின.

இந்தச் சம்பத்துக்கு முன்னதாக நேற்று வியாழக்கிழமை காலையில் இஸ்ரேலியத் துருப்பினர் டாங்கிகள் மற்றும் அபாச்சி ரக ஹெலிகள் சகிதம் காஸா பகுதியிலுள்ள 3 கிராமங்களுக்குள் நுழைந்தன.

இஸ்ரேலிய இராணுவம் நுழைந்த கிராமங்களிலுள்ள வீடுகள் பல அழிக்கப்படுவதாகப் பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)



குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான பஸ்.

# இதய நோய்க்குப் புதிய சிகிச்சை: அமெரிக்க டாக்டர்கள் சாதனை

சிக்காகோ,நவ.22

இதய நோய்க்கு புதிய சிகிச்சை முறையை அமெரிக்க டாக்டர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதயப் பகுதியில் பாதிப்படைந்த சதைகளை ஈடுகட்டவேண்டியது முதல் பணியாகும். இதற்காக புதிய செல்களை அந்த நோயாளியின் தொடையில் இருந்தோ அல்லது எலும்புகளில இருந்தோ எடுத்து அவற்றை இதயப் பகுதியில் வைப்பதன் மூலம் இதய சதைகளை வலுவடையச் செய்ய முடியும் இதுவே புதிய சிகிச்சை முறையாகும்.

இதய நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இதயமாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளாமல் இப்புதிய முறையின் மூலம் குணமடையலாம். இதயப் பகுதியில் புதிய செல்களை விதைப்பதன்மூலம் இதயம் பலப்படும்.

அமெரிக்காவில் சுமார் 50 லட்சம் பேர் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ரத்தத்தைப் போதுமான அளவுக்குச் செலுத்தக்கூடிய சக்தியை இதய வால்வுகள் இழந்து விடுவதே இந் நோய்க்குக் காரணமாகும்.

எனவே, புதிய செல்களை இதயப் பகுதியில் செலுத்துவதன் மூலம் இதய வால்வுகளை பலப்படுத்த இயலும்.

அமெரிக்காவில் சிக்காகோ நகரில் அண்மையில் நடந்த அறிவியல் அறிஞர்கள் மாநாட்டில் இதுதொடர்பான ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதய நோய்க்கு புதிய சிகிச்சை முறை வரவேற்கத்தக்கது என்று பெல்சில்வேனியா பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் டிமோதி கண்டன் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் நாட்டிலும் இதய நோய்க்கு புதிய சிகிச்சை முறையைக கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு ஒரு முதியவருக்கு இதய நோய்க்கு சிகிச்சையளிக்க புதிய முறையை சோதனை செய்தார் டாக்டர் பிரிப்பி மனாஸ்சே. நோயாளியின் இதயத்தைப் பலப்படுத்துவதற்காக எலும்புச் சதைப் பகுதியிலுள்ள செல்களை எடுத்து அவற்றை இதயப் பகுதியில் செலுத்தினார். அந்தச் செல்கள் நன்கு வளர்ச்சியடைந்து இதயப் பகுதிக்கு போதுமான இரத்தம் கிடைக்கத் தொடங்கியது.

இச்சோதனைக்கு மேலும் 10 நோயாளிகளை அவர் உட்படுத்தினார். இதுபோன்ற சோதனைகள் அமெரிக்கா, பிரான்ஸ் மட்டுமன்றி ஜேர்மனி, பிரிட்டன், போலந்து ஆகிய நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.(ம)

## உலக அரங்கில்

## கொலம்பியாவில் குண்டுவெடிப்பு

பொகோட்டோ,நவ.22

தென்னமெரிக்க நாடான கொலம்பியாவின் கரையோர நகர ஹோட்டல்கள் இரண்டின் முன்பாக இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 2பேர் கொல்லப்பட்டனர்; 10பேர் காயமடைந்தனர்.

கொலம்பியாவில் கடந்த ஒரு தசாப்தங்களாக தொடர்ந்துவரும் கிளர்ச்சி, சண்ட மார்டா நகருக்கும் பரவியுள்ளது என்பதையே இது காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றனர். கொலம்பியாவின் சண்ட மார்ட்டா கடற்கரையோர நகரம் தென்னமெரிக்காவின் புகழ்பெற்ற சுற்றுலா மையங்களில் ஒன்று.

சண்ட மார்டாவின் கரையோரம் உள்ள இரு ஹோட்டல்களின் முன்பாக வைக்கப்பட்டிருந்த குண்டுகளே வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் 65 வயது முதியவர் ஒருவரும் பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக கொலம்பிய இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் 43பேரைக் கைது செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களை இனம்காண்பதற்கு உதவுபவர்களுக்கு 18ஆயிரத்து 500 டொலர் பரிசு வழங்கப்படும் என்று கொலம்பிய அதிபர் அல்வாரோ உருபி அறிவித்துள்ளார். (ம)

# சதாமின் மகன் நடத்தும் பத்திரிகைக்குத் தடை!

பாக்தாக்,நவ.22

ஈராக்கில் அதிபர் சதாம் ஹுசைனின் இளைய மகன் உதய் சதாம் ஹுசைன் நடத்திவரும் 'பாபெல்' பத்திரிகைக்கு அந்நாட்டின் செய்தித்துறை ஒரு மாதம் தடை விதித்துள்ளது.

அரபு நாடுகளுக்கும் அரபுத் தலைவர்களுக்கும் எதிரான செய்திகளை ஈராக் பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்று செய்தித் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.



மதுவிற்பனை நிலையம் ஒன்றில் ரீ.வீ. பார்க்கும் ஈராக்கியர்.

ஆனால், ஏனைய வெளிநாட்டுப் பத்திரிகைகளின் செய்திகளை 'பாபெல்' எடுத்துப் பிரசுரித்து வந்தது. அவற்றில் பல செய்திகள், ஈராக் செய்தித்துறை உத்தரவை மீறுவதாக அமைந்திருந்தன.

அதையடுத்து சதாம் ஹுசைன் மகனின் பத்திரிகைக்கு தடை விதிககப்படுகிறது என ஈராக் பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். ஆனால் செய்தித்துறை இது குறித்து எதுவும் தெரிவிககவில்லை.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அரபு நாடுகளின் உச்சி மாநாடு கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. அப்போது ஏனைய அரபு நாடுகளுடன் நல்லுறவை வலுப்படுத்திக் கொள்ள ஈராக் நடவடிக்கை எடுத்தது.

அதன் விளைவாகவே சதாமின் மகன் நடத்தும் நாளேட்டுக்கு ஒரு மாதம் தடை விதிக்கப்படுகிறது என்று ஈராக் பத்திரிகையாளர்கள் கூறினர்.

ஆயுதக் கண்காணிப்புத் தொடர்பான ஐ.நா பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய பிரேரணைமீது ஈராக் நாடாளுமன்றில் விவாதம் நடைபெற்ற போது, ஐ.நா பிரேரணையை ஏற்றுக் கொள்ளுமாறு உதய் ஹுசைன் கேட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ம)



ஸ்பெயின் கடற்கரையோரம் கடந்த செவ்வாயன்று இரண்டாகப் பிளந்து கடலில் மூழ்கிய எண்ணெய் தாங்கிக் கப்பலின் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள். கப்பலின் உடைந்த இரு கூறுகளும் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கின்றன. இந்தக் கப்பலிலிருந்த 77 ஆயிரம் தொன் மசகு எண்ணெய் ஸ்பெயினின் கிழக்கு கடற்கரையோரத்தில் பரவிக் காணப்படுகின்றது. இதனால் அங்கு பெரும் சுற்றுச் சூழல் அபாயம் ஏற்பட்டுள்ளது. மீட்பு நடவடிக்கைகளில் மேற்கு நாடுகளைச் சேர்ந்த பல கப்பல்கள் ஈடுபட்டிருக்கின்றன. எனினும் மோசமான காலநிலை காரணமாக அப்பணிகளை தொடர்வது பெரும் இடைஞ்சலாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. கப்பல் இரு கூறுகளாக உடைந்தமைக்கு குண்டுத் தாக்குதல்கள் ஏதாவது காரணமாக இருக்குமா என்ற கோணத்தில் ஸ்பெயின் விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது.

### உலக வரைபடத்தில்

# ஈராக் இருக்கும் இடம் தெரியாத அமெரிக்கர்கள்

உலக அளவில் இளைஞர்கள் மத்தியில் புவியியல் தொடர்பான அறிவு மிகமோசமாக வீழ்ச்சி அடைந்துள்ளதாக அமெரிக்க நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அமெரிக்க தேசிய புவியியல் சமூகம் என்ற அமைப்பு இந்த ஆய்வை நடத்தியது. இதற்கென 9 நாடுகளைச் சேர்ந்த 3ஆயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களிடம் புவியியல் தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டன. சுவீடன், ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, கனடா, மெக்ஸிக்கோ ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஈராக்குக்கு எதிராக போர் ஒன்றை நடத்துவதற்கு அமெரிக்கா தீவிரமாக முயன்றுவரும் வேளையில் ஈராக் உலக வரைபடத்தில் எங்கிருக்கின்றது என்பது பெரும்பாலான அமெரிக்க இளைஞர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. 13சதவீதமான அமெரிக்க மாணவர்கள் மட்டுமே உலக வரைபடத்தில் ஈராக் எங்கிருக்கின்றது என்பதைத் தொட்டுக் காட்டினார்கள்.

அதே வரைபடத்தில் தமது சொந்த நாடு எது என்பதை 89 சதவீதமான மாணவர்கள் மட்டுமே அடையாளம் காட்டினார்கள் என்பது மிகவும் வேதனைதரும் விடயம் என்கிறது ஆய்வை நடத்திய அமைப்பு. அமெரிக்காவில் தற்போது நடைமுறையில் இருக்கும் தரப்படுத்தல் முறையினைக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதன்படி புவியியல் ரீதியான 56கேள்விகள் மாணவர்களிடம் கேட்கப்பட்டன. அவர்களின் பதில்களின் அடிப்படையில் அவர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்பட்டன.

இந்த தரப்படுத்தல் முறைப்படி 42 புள்ளிகளைப் பெற்றால் அவர் முதற்தரச் சித்தியைப் (Grade A) பெற்றவராவார். சுவீடனைச் சேர்ந்த ஒரு மாணவர் மட்டுமே கேட்கப்பட்ட கேள்விகளில் 40கேள்விகளுக்கு சரியான பதிலை அளித்து கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார். அடுத்த இடத்தை இத்தாலி மற்றும் ஜேர்மனி மாணவர்கள் பெற்றனர். இவர்கள் இருவருக்கும் 38 புள்ளிகள் கிடைத்தன. அமெரிக்க மாணவர்கள் ஆகக் கூடுதலாக 'டி' தரத்திலேயே சித்திபெற்றனர். அவர்களில் ஆகக்கூடுதலாக ஒருவர் மட்டும் 23கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தெரிவித்தார். (ம)

# எதிர்கால பொ.ஐ.மு.அரசின் திட்டங்களை ஜனாதிபதி டிசெ.6ஆம் திகதி அறிவிப்பாராம்!

கொழும்பு,நவ.22

அடுத்துவரும் பொ.ஐ.முன்னணி அரசின் செயற்றிட்டங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும டிசெம்பர் 6ஆம் திகதி காலியில் வைத்து அறிவிப்பார்.

பொ.ஐ.முன்னணியின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவரான அமரசிறி தொடங்கொட அம்பாலங்கொடையில் வைத்து கட்சிக் கூட்டமொன்றில் இதனைத்தெரிவித்தார்.

அவர் இக் கூட்டத்தில் மேலும் கூறியதாவது:

இனப்பிரச்சினை எமது முக்கிய பிரச்சினையல்ல. அது வடக்கிற்கு உரியதாகும்; தெற்கிற்கு உரிய பிரச்சினையல்ல. தெற்கிலுள்ள பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய பிரச்சினையே தெற்கின் பிரச்சினை.

அரச ஊழியர்களின், படையினரின், பொலீஸாரின் ஆதரவு இல்லாமல் அதிகாரத்துக்கு வரமுடியாது. மக்களை வீதியில் இறக்கி மக்கள் அலை எமது பக்கம் இருக்கிறது என்பதை காண்பித்தால் மட்டுமே அரச ஊழியர்கள், படையினர் எம்முடன் இணைவர்.

அரச ஊழியர்களும் பொலீஸாருமே வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றுகின்றனர். அவர்கள் இல்லாமல் தேர்தலில் வெற்றி பெறமுடியாது. எம்மைச் சுட்டால் நாமும் அதற்குத் தயாராக வேண்டும் -

இவ்வாறு அவர் கூறினார். (எ)

## நிதிஒதுக்கீடு

யுத்தத்தினால் சேதமடைந்த பளைப் பொதுச் சந்தையின் கடைத் தொகுதிகளையும் மீன் சந்தையையும புனரமைக்க வடமாகாண புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகாரசபையினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடைத்தொகுதியின் மேல்மாடி திருத்த வேலைக்கென இருபது லட்சம் ரூபாவும், மீன்சந்தை பிரிவு அமைக்க 3 லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-117)


உ

## சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள் சஷ்டியப்த பூர்த்தி வரவேற்பு உபசாரம்

சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குரு **கிரியாகலாபமணி சிவாகமஞானசேகரம் Dr.சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள்** அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை முன்னிட்டு எமது ஆலயத்தில் இன்று (22.11.2002) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வரவேற்பு உபசார வைபவமும் **"சோமாஸ் கந்தம்"** நூல் அறிமுக வெளியீடும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இவ்வைபவங்களில் குருக்களின் உறவினர்கள், சிஷ்யர்கள், அபிமானிகள் அனைவரும் இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம். (10826)

குடும்பத்தினர்,
சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான தொண்டர் சபையினர்.


ஸ்ரீராம ஜெயம்

## 4ஆவது வருட நினைவலைகள்

தோற்றம் 29 - 03 - 1929



மறைவு 05 - 12 - 1998

### அமரர் மூத்தார் சின்னத்துரை

*(முன்னாள் ஊழியர், சீமெந்துக் கூட்டுத்தாபனம், இன்னாவத்தை, கோல்லங்கலட்டி)*

திதி: 22.11.2002 (திருதியை)

ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டாலும் அப்பா
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டகலாது!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.*
*ஓம் சாந்தி!! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

*காளையடி தெற்கு, பண்டத்தரிப்பு.* (10797)

- மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.


## சுயமாகத் தொழில் செய்யுங்கள்



வீட்டில் இருந்து குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து மிகக் குறைந்த முதலீட்டில் இயந்திரம் இல்லாமல் செய்யக்கூடிய நல்ல கைத்தொழில் ஸ்கிரீன் பிரிண்டிங். இந்தத் தொழிலை கொழும்பில் பயின்று இன்று உயர்ந்த நிலையில் தொழில் செய்து வருகின்றனர்.

யாழ்.நகரில் உள்ள தமிழ் மக்களுக்கும் இந்தக் கலைத் தொழிலை கற்றுக் கொடுக்க தென் தமிழகத்தில் இருந்து R.பரதன் (அச்சுக்கலை நிபுணர்) யாழ்.நகருக்கு வருகை தந்துள்ளார். இந்தத் தொழில் பற்றிய முழு விவரம், இதன் பயன் பற்றிய விளக்கம் தேவைப்படுவோர் இலவசமாக நேரில் வந்து சந்தித்து பின்பு பயிற்சியில் சேரலாம். பயிற்சி 3 நாள்கள் மட்டுமே. பயிற்சிக்கு பின்பு தொழில் தொடங்கலாம். சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தொழில் செய்வதன்மூலம்




பிளாஸ்டிக் பேனா, தகரம், துணிவகைகள், பேனர், பில்புக், நோட்டீஸ், போஸ்டர், திருமண அழைப்பிதழ் முதலியன பிரிண்டிங் செய்யலாம். இந்த அரிய வாய்ப்பை யாழ்.நகர மக்கள் பயன்படுத்திக் கொள்ளவும். பயிற்சியில் வயது வரம்பு தேவையில்லை.

*நேரில் தொடர்பு முகவரி:*

**CAREER COM INSTITUTE**
79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777 706334 (10829)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 12 - 1929



மறைவு 22 - 11 - 1998

### அமரர் கந்தையா அமிர்தலிங்கம்

*(யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற ஊழியர்)*

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஐயா என்றழைக்க உறவொன்றில்லையே!

*1/9, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*

அ.புஸ்பகுமார் (மகன்)
குடும்பத்தினர். (10803)




உதயன்

## வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டு விழா

இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் சமுக நல்லுறவை வளர்ப்பதற்கும் கலைத்துறையைப் போல விளையாட்டுத்துறையும் பெரியளவில் உதவுகிறது.

இந்தவகையில் களுத்துறையில் நான்கு நாள்கள் நடந்துமுடிந்த வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டு விழா பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

வடக்கு - கிழக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் 1,600 விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் கலந்துகொண்ட இந்த விழா மிகவும் வெற்றிகரமாக நடந்தது.

அடுத்தவருடம் இந்த விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டு விழா நடைபெறுவதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் பலரில் காணி அமைச்சர் ராஜித சேனரத்ன, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், வடக்கு - கிழகரு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தன முதலானோர் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

அடுத்து நடைபெறவிருக்கும் விளையாட்டு விழாக்களில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்று இல்லாமல் நாடு முழுவதிலுமிருந்து விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை இவர்கள் செய்யவேண்டும்.

களுத்துறை விளையாட்டு விழாவிலே விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பேசுகையில், காத்திரமான சில கருத்துக்களை வெளியிட்டார். "யாழ்.பல்கலைக்கழகத்துடன் ஒப்பிடுகையில் தென்பகுதி நிலை குறித்து நான் வெட்கப்படுகிறேன்" என்றார் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ.

"அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தானதும் முதன்முதலில் யாழ்ப்பாணத்துக்குச் சென்ற அமைச்சர்களில் நானும் ஒருவன்.

"அப்பொழுது யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே நான் கண்ட காட்சிகள் என்னை வியக்கவைத்தன" என்றார் அமைச்சர்.

இந்தப் பாராட்டு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மட்டுமன்றி, தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில், அதாவது அவர்களின் தாயகத்தில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கும் உரியதாகும்.

போர்க்கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கல்வி பாதிப்புறாமல் பார்த்துக்கொண்ட பல்கலைக்கழகங்கள் இவை. முன்னைய காலங்களில் சில கறைபடிந்த சம்பவங்கள் இந்தப் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றிருந்தபோதிலும் இப்போது நிலைமை அடியோடு மாறிவிட்டது.

மாணவர்கள் தாங்கள் கல்வியில் கவனம் செலுத்திக்கொண்டு தமிழ்பேசும் மக்களிடையே விழிப்புணர்வையும் எழுச்சியையும் அமைதியான முறையில் ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அதனால் பாராட்டுக் கிடைத்திருப்பதில் வியப்பில்லை.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, விளையாட்டுத்துறையில் திறமையுள்ளவர்கள் பலர், வடக்கு - கிழக்கிலிருக்கிறார்கள் என்ற உண்மையையும் எடுத்துக்கூறினார். சிலரைப் பெயர்சொல்லியும் சுட்டிக்காட்டினார்.

இவர்களுக்கெல்லாம் சரியான முறையில் பயிற்சி அளித்தால் உலக விளையாட்டுப் போட்டிகளிலேயே கலந்துகொண்டு நாட்டுக்கே பெயரும், புகழும் தேடித்தருவார்கள். எத்தனையோ முரளீதரன்கள் இந்த நாட்டுக்குக் கிடைப்பார்கள்.

பயிற்சிகளை முதலில் மாவட்ட ரீதியில் நடத்தலாம். அடுத்தபடியாக மாவட்டங்களில் ஆகக்கூடுதலான திறமை காட்டுபவர்களை கொழும்புக்கு வரவழைத்து தேசிய ரீதியில் பயிற்சி அளிக்க வேண்டும்.

இன ஒற்றுமையையும், தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதில் முனைப்பாக இருக்கும் இன்றைய அரசின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இந்த நல்ல முயற்சியில் இறங்குவாரா? தாம் தெரிவித்த கருத்துக்களுக்கு உயிர்கொடுப்பாரா?

# யாழ். பல்கலைக்கழகத்துடன் ஒப்பிடுகையில் தென்பகுதி நிலைகுறித்து வெட்கமடைகிறேன்!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் கூறுகின்றார்; வீரர்களுக்கும் பாராட்டு

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்கமும் கட்டடங்களின் சுத்தமும் என்னை வியக்கவைத்தன. யுத்தச் சூழ்நிலைக்கு மத்தியிலும் அவ்வாறான ஒரு பல்கலைககழகம் இருப்பதைக்கண்டு பெருமையடைந்தேன். அதேவேளை, தென்பகுதியில் ஜே.வி.பியின் நடவடிக்கையால் பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டிருக்கும் நிலையை எண்ணி வெட்கமும் வேதனையும் அடைந்தேன்.

- இவ்வாறு இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார். வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டு விழாவின் இறுதிநாள் வைபவத்தில் கலந்துகொண்டு அமைச்சர் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

'அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் முதன் முதலில் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற அமைச்சர்களில் நானும் ஒருவன்.

'அப்பொழுது யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு நான் கண்ட காட்சிகள், என்னை வியக்க வைத்தன.

'இந்த விழா எவ்வாறு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் வடக்கு - கிழக்கு மாகாண இளைஞர், யுவதிகள் பங்குபற்றாதிருந்தால் இவ்விழா சிறப்படைந்திருக்காது.

'கடந்த 20 வருடங்களாக யுத்த சூழ்நிலைக்குள்ளாகியிருந்த இந்த இளைஞர், யுவதிகள் திறமையாகப் போட்டிகளில் பங்குபற்றினர்.

'இங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடியதன்மூலம் இப்போட்டிகளில் பங்குபற்றிய வடக்கு - கிழக்கு பிரதேச இளைஞர், யுவதிகளில் தேசிய ரீதியில் பிரகாசிக்கக் கூடியவர்களும் உள்ளனர் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

'அடுத்த வருடம் இச்சமாதான விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. வடக்கு - கிழக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் தரம் வாய்ந்த மைதானமொன்றை அமைக்கவேண்டுமென மாகாண ஆளுநர் அசோக ஜயவர்தன என்னிடம் கோரினார்.

'அப்பகுதிகளிலுள்ள கண்ணிவெடிகளும் மிதிவெடிகளும் அகற்றப்பட்டவுடன் மைதான வசதிகள் மட்டுமல்ல ஏனைய வசதிகளும் ஏற்படுத்தப்படுமென உறுதி கூறுகிறேன்.'

- இவ்வாறு அமைச்சர் கூறினார். (ஒ)

# பாதுகாப்புக் கெடுபிடிகளினால் குருநகர் மக்களுக்கு நெருக்கடி!

## தளர்த்தும்படி மீனவர் சங்கங்கள் கோரிக்கை

குருநகர்,நவ.22

குருநகர் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள குருநகர் புதிய கடற்கரை வீதி மக்கள் பயன்பாட்டுக்கு நீண்டகாலமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் நாளாந்தம் பல நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுவதாகக் கூறப்படுகிறது.

குருநகர் மீனவர்கள் கடலுக்குச் செல்ல இறங்குதுறைக்கு தற்போது குருநகரின் மத்திய கிழக்கு வீதியையே பயன்படுத்துகின்றனர். வழக்கமாக இவ்வீதி மக்கள் நடமாட்டம் அதிகமுள்ளது. இந்நிலையில் மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களையும் எடுத்துவருவதால் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்துள்ளது.

அத்துடன் குருநகரிலுள்ள பல வீதிகள் மீனவர்களது வலைகள் காயவிடும் இடங்களாகவும் மாறியுள்ளன. கடற்கரையில் வலைகளைக் காயவைக்க முடியாததாலேயே இந்நிலை ஏற்படுகிறது. இவ்வீதிகளூடாக மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களான கம்பு, அலவாங்கு முதலியவைகளை எடுத்துவரும்போது பயணிக்கும் மக்கள் உயிராபத்தையும் எதிர்நோக்கவேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.

மேலும், கடலில் இருந்து கரை திரும்பும் மீனவர்கள் தாம் பிடித்துவரும் மீன்களைச் சந்தைப்படுத்தும் இடம் குருநகர் கடற்கரையிலிருந்து தொலைவில் அமைந்துள்ளது. பிற பகுதிகளில் மீனவர்கள் தொழில்செய்து திரும்பும் கடற்கரையிலேயே இத்தகைய இடங்கள் அமைந்துள்ளன. ஆனால், குருநகரில் உள்ள மீன்வாடி மட்டும் அதிக தூரத்தில் உள்ளது. மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்று கரைக்குத் திரும்பும் மீனவர்கள் ஏற்கனவே களைப்படைந்து வருகின்றனர். இந்நிலையில் மீனைச் சந்தைப்படுத்துவதற்காக அவற்றைக் காவிச் செல்ல நேரிடுகிறது.

தற்போது பெய்துவரும் மழை காரணமாகவும் ஆழ்கடல் மீன்பிடித்தலாலும் அதிக மீன்கள் அகப்படும் நிலை நிலவுகிறது. இச்சந்தர்ப்பங்களில் அவற்றைக் கரையில் இருந்து சந்தைக்கு எடுத்துச்செல்ல மீனவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இவைகளைக் கொண்டுசெல்வதற்கு வாடகைக்கு வாகனங்களைப் பிடிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

மேலும், குருநகர் மீனவர்கள் பலர் தற்போது புதிதாக மீன்பிடிக்க அனுமதி பெற்று மீன்பிடித்து வருகிறார்கள். அவர்களிடம் சுமார் 150இற்கும் மேற்பட்ட வள்ளங்கள், கல்நார் இழைப்படகுகள் உள்ளன. இப்படகுகளைக் குருநகர் இறங்குதுறையில் விடுவதில் மிகுந்த இடநெருக்கடியை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தற்போது மேலும் பல படகுகளை மீனவர்கள் விலைக்கு வாங்க முனைந்துள்ளனர். இதனால் இங்கு இடநெருக்கடி அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. குருநகர் இறங்குதுறைக்கு கிழக்குப் புறத்தில் மட்டுமே வள்ளங்கள் கட்டப்படவேண்டும் எனவும் - மேற்குப் பக்கமாக இவ்வள்ளங்கள் கட்டப்படக் கூடாது எனவும் - கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாலேயே இந்நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மீனவர் சங்கங்கள் தெரிவித்தன.

இத்தகைய நெருக்கடிகள் தீரவேண்டுமானால் குருநகர் புதிய கடற்கரை வீதியை மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்துவிடவேண்டும் என்றும் -

குருநகர் இறங்குதுறையின் மேற்குப் பக்கமாகவும் படகுகளை கரையொதுக்கிவிட அனுமதிக்கப்படவேண்டுமென்றும்- குருநகர் மீனவர் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ஒ-51)

# கச்சாய் விறுமர் கோயில் வீதி பொதுமக்களால் புனரமைப்பு

கொடிகாமம்,நவ.22

கச்சாய் - வெள்ளாம்போக்கட்டி விறுமர் கோயில் வீதி பொதுமக்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் பாரிய குன்றும் குழியுமாகக் காணப்பட்டது. இதனால், போக்குவரத்துச் செய்யமுடியாது அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அதேவேளை, இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் பிரதேச சபையிடமும், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமும், சம்பந்தப்பட்ட பகுதி கிராம சேவையாளரிடமும் முறைப்பாடு செய்தனர் என்றும் -

எனினும், இதுவரை இது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் -

கூறப்பட்டது.

பருவ மழை ஆரம்பித்துள்ளதையடுத்து மேற்படி வீதியில் உள்ள குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதுடன் -

வீதியில் கொடிகாமம் சந்தைக்கு செல்லும் விவசாயிகள் மரக்கறி மூடைகளுடன் குழிகளில் விழுந்து செல்லவேண்டிய துயரநிலையும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதனையடுத்து, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய் இளைஞர்கள் பொதுமக்களின் உடலுதவியுடனும் உழவு இயந்திர உரிமையாளர்களின் உதவியுடனும் கட்டட இடிபாடுகளைப் பயன்படுத்தி வீதியைப் புனரமைத்துள்ளனர்.

கொடிகாமம் சந்தைக்கு அல்லாரை, புங்கடி, கோட்டையடி, கச்சாய் தெற்கு, வடக்கு, வெள்ளாம்போக்கட்டி விவசாயிகள் மேற்படி வீதியூடாகத் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-74)

### நாளை

கார்த்திகை 07
சனிக்கிழமை
(23.11.2002)
திதி : திருதியை
முற்பகல் 10.12 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
நள்ளிரவு 11.55 வரை.
சங்கடஹர
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 3.11 - 4.41
ராகுகாலம்: 9.11 - 10.41
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்ல பழக்கங்களை உதறித்தள்ளுவது, தீய பழக்கங்களை பழகிக்கொள்வதைவிட எளிதானது.

# போராட்டம் வேண்டாம்; வெளியேறி விடுகிறோம்!

## பிரிகேடியர் வாக்குறுதி

தென்மராட்சி,நவ.22

சாவகச்சேரி நகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவேண்டாமெனவும் -

இன்னும் ஒரு வாரகாலத்தில் தொழிலாளர் விடுதிகளில் தங்கியுள்ள படையினர் வெளியேறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் -

521ஆவது படையணியின் பிரிகேடியர், தொழிலாளர்களுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை உறுதியளித்துள்ளார்.

தொழிலாளர் விடுதிகளில் தங்கியுள்ள படையினரை வெளி யேறக் கோரி தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக முன்னறிவித்தல் கொடுத்திருந்தனர். இதனையடுத்து அப்பகுதிக்கு நேரில்சென்று 521 ஆவது படையணி பிரிகேடியர் நடவடிக்கை மேற்கொள்வதாக வாக்குறுதி அளித்தார்.

(ஒ-117)

# பொதுக்கிணறை புனரமைக்க மேயரிடம் வேண்டுகோள்

அரியாலை,நவ.22

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள பொதுக்கிணறை இறைத்து சுத்தப்படுத்தி உதவுமாறு கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் யாழ்.மாநகர முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்த மகஜர் ஒன்றை மேற்படி மன்றம் மாநகர முதல்வருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களில் பலர் குடிதண்ணீர் தேவைக்கு இந்தக் கிணற்றையே பயன்படுத்துகின்றனர்.

அசுத்தப்பட்டிருக்கும் இந்தக் கிணற்றை இறைத்து துப்புரவு செய்து தருமாறும் -

மாசுபடுவதை தவிர்ப்பதற்கு கிணற்றிற்கு மேல் மூடுவலை ஒன்றை இடுமாறும் -

மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-17)

# காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

உரும்பிராய்ச் சந்தியில் கடந்த 18 ஆம் திகதி காலை இராணுவ பஸ்வண்டி ஒன்றும் சைக்கிளும் மோதிக்கொண்டதில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்றவரான உரும்பிராயைச் சேர்ந்த பி.பஞ்சலிங்கநாதன் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

விபத்தின்போது தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தவேளை சிகிச்சை பலனளிக்காது இரு நாள்களின் பின் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார். (எ-15)

## கடன் அடிப்படையில் கட்டுமரம் வழங்க நடவடிக்கை

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீள குடியமர்ந்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் கட்டுமரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி ஐ.நாஅபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அப்பிரதேசத்திலுள்ள 9 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா 5கட்டுமரங்களை முதற்கட்டமாக வழங்க நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது. (ஒ-182)

## மீள ஆரம்பமான பஸ்சேவைகள்

யாழ்ப்பாணத்திலிருந்து - நாவற்குழியூடாக கோயிலாக்கண்டி வரை பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்சேவையை நண்பகலிலும் நடத்தி இப்பகுதி நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்று திரும்ப உதவுமாறு பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரியுள்ளனர். இதேவேளை-யாழ்ப்பாணத்தி லிருந்து, நுணாவில் சந்தி, - கனகன் புளியடிச்சந்தியூடாக கொடிகாமத்திற்கான 794ஆம் தட இலக்க பஸ் சேவை கடந்த 15ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டரை வருடங்களின் பின் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-117-31)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 23 - 03 - 1941



இறப்பு 01 - 11 - 2002

எமது அன்புத் தெய்வம்

### பொன்னையா விவேகானந்தன்

*(உரிமையாளர், துர்க்கா என்ரபிறைஸ்)*

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (23.11.2002) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*"கஜானாஸ்"*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (10783)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சு.பொ.நடராசா (சகோதரன்)
*(அண்ணா கோப்பி)*

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 30 - 04 - 1917



மறைவு 03 - 12 - 2001

அமரர்

### கட்டையர் கனகசபை

திதி: 22.11.2002

*இல்லறத்தில் கைகோத்த எனை விட்டுச் சென்றீரோ*
*இன்பதுன்பம் போதுமென்று இளைப்பாறப் போனீரோ*
*நல்லறமே கல்வியென்று பிள்ளைகளைக் கற்பித்தீர்*
*நாம் கடமை செய்ய முன்னர் நீரெங்கு சென்றீரையா?*
*மல்லரின் போரலையில் ஊர்விட்டு நாம் சென்றோம்*
*மறுபடியும் சேர்வோம் என்றுதானே பிரிந்து போனோம்*
*சொல்லாமல் நீர் சென்றீர் நாம் சொந்த இடம் சேருமுன்னே*
*சோதனையைத் தாங்காது வாடுகிறோம் நாமையா!*

*ஆலமரமாக நீர்நின்று ஆதரவு தந்தீர்*
*அன்பாக விழுதுகளை மண்ணில் வரவிட்டீர்*
*காலமகன் தாலாட்டக் கண்ணாகக் காத்தீர்*
*கறையில்லா வாழ்வெமக்குக், கணக்கிட்டுத் தந்தீர்*
*ஞாலத்தின் விளக்காக உமைப் போற்றி நிற்க*
*காலனவன் கைப்பிடித்து நீரெங்கு சென்றீர்*
*மூலமரம் சரிந்ததுவோ? முழுமதியும் மறைந்ததுவோ?*
*முழுமனதும் அஞ்சலிகள் விழிநிறைய பெருமழைகள்.*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*வேலணை வடக்கு,*
*வேலணை - 05.* (10825) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

கொடிகாம் ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவர்
திரு.மா.ஞானசேகரம் அவர்களின் அன்புச் சகோதரி

### செல்வி மாணிக்கம் நேசமலர்

(கச்சாய், கொடிகாமம்)

அவர்கள் 18.11.2002 அன்று காலமாகிவிட்டார். அவரின் குடும்பத்திற்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொடிகாம்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

(C-24996)


PRESIDENT ®



CFL
பல்புகள், சர்வதேச அங்கீகாரம் பெற்ற
80% மின்சார சேமிப்பை 1 வருட
உத்தரவாதத்துடன் வழங்குகின்றது
போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
CEB இன் அங்கீகாரம் பெற்று
இலகு தவணை முறையில் கிடைக்கின்றது
ISO 9002
JAFFNA ELECTRICALS
No. 06, Stanley Road, Jaffna.

க்லோகாட்
ஜம்போ பக்கட் ஒன்றுடன்
க்லோகாட் டூத் பிரஷ் ஒன்று
ரூ. 12/-ஐ சேமியுங்கள்




க்லோகாட் ஜம்போ
கொடுக்கும் பணத்தை விடப்
பெறுமதி வாய்ந்த குடும்பப் பக்கட்
க்லோகாட்
Masters DDB

# வடக்கு - கிழக்கில் படையினர் உள்ளவரை புலிகள் ஆயுதங்களைக் கைவிட முடியாது!

## மாவை. சேனாதிராசா எம்.பி. உரை

வடமராட்சி கிழக்கு,நவ.22

"வடக்கு - கிழக்கில் இராணுவம் இருக்கும்வரை புலிகள் ஆயுதங்களைக் கைவிடமுடியாது."

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா குடத்தனையில் கடந்த சனியன்று நடை



பெற்ற இலவச கணனி பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் மு. அழகராசா தலைமைதாங்கினார்.

இவ்விழாவில் மாவை.சேனாதிராசா தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது -

"தந்தை செல்வா மென்மையான நாவினால் மெல்லிய குரலில் அன்று கூறியவைகள் சிங்கள அரசுகளுக்குப் புரியவில்லை. தமிழ்மக்களின் அஹிம்சைப் போராட்டங்கள் துப்பாக்கி வேட்டுக்களினால் அடக்கி ஒடுக்கப்பட்டன. ஒற்றை ஆட்சியினையும், பௌத்த மத செல்வாக்கினையும் நிலைநாட்டவே மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் முற்பட்டன. ஜனநாயகப் போராட்டம் அடக்கி ஒடுக்கப்பட்டது.

தற்போது போர் ஓய்ந்து இருக்கின்றதேதவிர, புதிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. சமாதானத்தின் ஒளிக்கீற்று தூரத்திலேயே தெரிகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு 10 மாதங்களாகியபோதிலும், இன்னும் இலக்கு எட்டாத, அடித்தளம் இடப்படாத நிலையே காணப்படுகின்றது.

தமிழ் இனத்தின் போராட்டம் இன்று அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கில் இராணுவம் இருக்கும்வரை புலிகள் ஆயுதத்தைக் கைவிடமுடியாது. நாட்டில் தற்போது உருவாகிவரும் நல்ல சூழலை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் போனறவர்கள் கெடுப்பதற்கும், குழப்புவதற்கும் முனைகின்றார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாரதி உரையாற்றும் போது தெரிவித்ததாவது.

"புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரும் குடத்தனை, மணற்காடு போன்ற இடங்களில் இராணுவக் கெடுபிடிகள் குறையவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் பீதியிலும், துன்பத்திலும் வாழ வேண்டியுள்ளது. வேறு எங்கும் நடகாத புதிய நடைமுறைகளை இராணுவம் மக்கள்மீது சுமத்தி வருகின்றது. இத்தகைய அச்சுறுத்தல்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்" என்றார்.

விழாவின் ஆரம்பத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா மங்கள விளக்கினை ஏற்றிவைத்தார். வடமராட்சி கடற்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் பாரதி இலவச கணனிப் பயிற்சி நிலையத்தை நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

(ஒ-182-36)

# ஓய்வுபெற்றவர் விவரங்களை உள்துறை அமைச்சு திரட்டுகிறது

யாழ்ப்பாணம்,நவ.22

கடந்த 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றோர் விவரங்கள் உள்துறை அமைச்சினால் திரட்டப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பொலீஸ் உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர்கள் மற்றும் எழுதுவினைஞர் தரத்துக்கு மேற்பட்டவர்களின் விவரங்களே இவ்வாறு சேகரிக்கப்பட்டு வருகின்றன.

உள்துறை அமைச்சினால் சேகரிக்கப்படும் இந்த விவரங்கள் யாவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பன விவரங்கள் சகல மாவட்ட செயலங்களுக்கும் உள்துறை அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களை மீண்டும் பணிக்குச் சேர்த்துக்கொள்வதன் ஒரு கட்டமாகவே இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. அனுபவமும், உயர்ந்த கல்வித் தகைமையும் உடையவர்கள் பற்றாக்குறையாக உள்ளமையே இவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10-8)

# வடிகால்களில் கழிவுப்பொருள்; வீதிகளில் மழைநீர் தேக்கம்

யாழ்.குடாநாட்டில் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் பெய்த பலத்த மழை காரணமாக உருவான வெள்ளம் வாய்க்கால்கள் புனரமைக்கப்படாததை அடுத்து வீதிகளில் தேங்கிநிற்பதை யாழ்.மாநகரசபை, நல்லூர் பிரதேச சபை எல்லைப்பகுதிகளுக்குள் அவதானிக்க முடிகிறது.

நல்லூர் கோவில் வீதி, சங்கிலியன் வீதிப்பகுதிகளில் உள்ள வாய்க்கால்களில் கழிவுப்பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் மழை வெள்ளம் ஓடமுடியாமல் வீதிகளில் தேங்கிநிற்கின்றது.

இதேபோன்று நல்லூர்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட கொக்குவில் பொற்பதி வீதி, கோண்டாவில் குட்செற் வீதி, புகையிரத வீதி மற்றும் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் வீதி, நாவலடி வீதி என்பவற்றிலும் வாய்க்கால்கள் நிறைந்து வீதியில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.

கடந்த செவ்வாய் அன்று மாலை மேற்படி வீதிகளூடாகப் பயணம் செய்த பலரும் தொடர்ந்தும் வீதிகள் வழியாகப் பிரயாணம் செய்யமுடியாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதையும், வேறு வீதிகளூடாகப் பயணம் செய்ததையும் காணமுடிந்தது.

குறிப்பாக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தோர் இவ்வாறு சிரமங்களை எதிர்நோக்கியதாகக் கூறப்பட்டது.

எனவே, மேற்படி வீதி வாய்க்கால்களை இனிமேலாவது துப்புரவு செய்து வெள்ளம் வீதிகளில் தேங்காமல் நிற்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-86)

# பிரதமர், படைத்தளபதிகளுக்கு ஜனாதிபதி தந்த ஏமாற்றம்!

கொழும்பு,நவ.22

பிரதமர் மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோரைப் பல மணி நேரம் காத்திருக்கவைத்துவிட்டு, கடைசியில் பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தை ரத்துச்செய்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கூட்டம் நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு கவுன்ஸில் உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தயாராக இருந்தனர்.

பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் சற்றுப் பிற்போடப்படுவதாக ஜனாதிபதி செயலகம் மூன்று தடவைகள் உறுப்பினர்களுக்கு அறிவித்தது.

எனினும், மீண்டும் நண்பகலில் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு கவுன்ஸில் உறுப்பினர்கள் தமது ஏனைய கடமைகளை ரத்துச்செய்துவிட்டு கூட்டத்தில கலந்துகொள்ளத் தயாராகவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வர்த்தகர் மீதான தாக்குதல் குறித்த விசாரணை

யாழ்ப்பாணம்,நவ.22

கடந்த ஜூலை மாதம் யாழ்.நகரப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவர் பொலீஸாரால் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது வர்த்தகருக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு ஈடாக பொலீஸாரால் 20 ஆயிரம் ரூபா தருவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும், தனக்கு அது போதாது என்று தெரிவித்த வர்த்தகரான இராசரத்தினம் சர்வேஸ்வரன் பொலீஸாரால் முன்பு கூறியவாறு 25 ஆயிரம் ரூபா தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து எதிர்வரும் 27ஆம் திகதி மீண்டும் இருதரப்பினரும் ஆணைக்குழு அலுவலகத்துக்கு சமுகமளிக்கும்படி இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகரா அழைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் விசாரணைக்கு சம்பவத்துடன் தொடர்புடைய இரு பொலீஸாரும் சமுகமளித்திருந்தனர்.

(ஒ-10-8)

## பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.22

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 6ஆம் திகதிமுதல் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் மாணவ பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்துக் கைவிடப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் கால அவகாசத்துடன் கூடிய உறுதிமொழியை வழங்கியதை அடுத்து தாம் பகிஷ்கரிப்பைக் கைவிட்டுள்ளதாக மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-10)

## சுவீடன் தூதுவர், தமிழ்ச்செல்வன் சந்திப்பு

வவுனியா,நவ.22

சுவீடன் நாட்டின் இலங்கைக்கான தூதுவருக்கும் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளருக்கும் இடையிலான சந்திப்பு மூன்று கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சுவீடன் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் எயனும் சுவீடன் நாட்டின் உதவும் அமைப்பான 'சீதாவின்' இணைப்பாளரும் கலந்துகொண்டனர். புலிகள் தரப்பில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவன், அரசியல் பிரிவைச் சேர்ந்த ஜோர்ஜ், நொல் காப்பியன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

(ஐ-4)

# தாதியப் பயிற்சிமுடித்து 61பேர் வெளியேறினர்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.போதனாவைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் கற்கை நெறியினை முடித்துக்கொண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 65 பேரில் 61பேர் சித்தியடைந்து வெளியேறியுள்ளனர்.

சித்தியடைந்து வெளியேறியவர்களைத் தாதியப் பணிக்கு நியமிக்கும்பொருட்டு, வைத்தியசாலை நிர்வாகம் அவர்கள் பணிபுரிய விரும்பும் இடங்களைத் தெரிவக்கும்படி கோரியுள்ளது.

கடந்த 20 வருடகாலத்தில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் தற்போதே அதிகளவானவர்கள் சித்தியடைந்துள்ளதாக தாதியர் பயிற்சிப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-15)

# தென்னை மீள் நடுகைக்கு பளையில் மானிய உதவி

தென்மராட்சி,நவ.22

பளைப் பிரதேசத்தில் அழிந்து போன தென்னை மரங்களை ஈடு செய்வதற்காக தென்னை மீள் நடுகைத் திட்டம் ஒன்றினை தென்னை அபிவிருத்திச் சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் அரை ஏக்கருக்கு உட்பட்ட காணிகளில் தென்னைச் செய்கையில் ஈடுபடுவோருக்கு 8ஆயிரம் ரூபாவரை மானிய உதவி வழங்கவுள்ளது.

வீட்டுத்தோட்ட தென்னைச் செய்கையில் ஈடுபடவுள்ளோரும், அரை ஏக்கருக்கு உட்பட்ட காணிகளில் தென்னை பயிரிடவுள்ளோரும் பிரதேச செயலகத்தில் தென்னை பயிர்ச் செய்கை உத்தியோகத்தரிடம் உரிய படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

### பிரதேச செயலர் பிரிவாக

# வடமராட்சி கிழக்குப் பகுதியை தரமுயர்த்தும்படி கோரிக்கை

வடமராட்சிகிழக்கு,நவ.22

வடமராட்சிகிழக்கு உதவி அரச அதிபர் பிரிவினை பிரதேச செயலர் பிரிவாகத் தரமுயர்த்துமாறும், வடமராட்சிகிழக்கிற்கு தனியான பிரதேச சபை ஒன்றினை அமைக்குமாறும் கோரி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவிடம் வடமராட்சிகிழக்கு புனரமைப்புக்குழு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

17 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டதாக 1989ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது. இடப்பெயர்வுக்குப் பின்னர் தற்போது மக்கள் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். அப்பிரதேசத்தின் அபிவிருத்தி கருதி பிரதேச செயலர் பிரிவாக அதனைத் தரமுயர்த்துமாறும், தனியான பிரதேச சபை ஒன்றினை பருத்தித்துறை பிரதேச சபையிலிருந்து பிரித்தெடுத்து உருவாக்குமாறும் அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

(ஒ-182)

### வலல்லாவிட்ட பி.ச.தலைவர் கொலை:

# முக்கிய இரண்டு சந்தேகநபர்கள் மாளிகாகந்த நீதிமன்றத்தில் சரண்

கொழும்பு,நவ.22

வலல்லாவிட்ட பிரதேச சபைத் தலைவர், அவரின் சாரதி ஆகியோரின் கொலைகள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த முக்கிய இரண்டு சந்தேகநபர்கள் சரணடைந்திருக்கின்றனர்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் காலை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவருடாகச் சரணடைந்தனர்.

நீதிமன்றத்தில் சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை அடுத்து, அவர்கள் இருவரையும் எதிர்வரும் 2ஆம் திகதி பத்துகம நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு நீதிவான் குசலா சரோஜினி வீரவர்தன உத்தரவிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி இக்கொலைகள் இடம்பெற்றன.

(ஐ)

# இன்பருட்டியில் களவுபோன படகு முள்ளி வாய்க்காலில் மீட்கப்பட்டது

செம்பியன்பற்று,நவ.22

இன்பருட்டி கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்தபோது கடந்த 6ஆம் திகதி காணாமற்போன இயந்திரப் படகு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளி வாய்க்கால் கிராமத்தில் அனாதரவாகக் காணப்பட்டது.

30வலைகள் கொண்ட இந்த இயந்திரப் படகு இன்பருட்டி கடற்கரையில் கட்டப்பட்டிருந்தது. மறுநாள் காலை தொழிலுக்குச் செல்வதற்காக மீனவர்கள் சென்றபோது படகு காணாமற்போய்விட்டது. இது சம்பந்தமாக பொலீஸாரிடமும் விடுதலைப் புலிகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், முல்லைத்தீவிலுள்ள முள்ளிவாய்க்கால் கடற்கரையில் இப்படகு அனாதரவாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை கடற்றொழிலாளர் சங்கம் பொறுப்பேற்று படகின் உரிமையாளருக்கு இது குறித்து அறிவித்தது.

(ஒ-36)

# 2 மாதங்களில் 2,609 பேருக்கு 'லைசன்ஸ்' பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

கடந்த செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் ஆகிய இரு மாதங்களில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தினால் 2ஆயிரத்து 609 பேர் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டதாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் நீண்டகால இடைவெளிக்குப் பின்பு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனையடுத்து கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக இப்பணி இடம்பெற்று வருகிறது. இதன் மூலம் வாகனங்கள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் இடம்பெற்றுவரும் வேளையில் மேற்படி பரீட்சைக்கு 2 ஆயிரத்து 609 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும், இவர்களில் 545 பேர் பரீட்சைக்குத் தோற்றவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பரீட்சைக்கான திகதி வழங்கப்படுவதற்கு முன்பு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தவர்களை நேரில் அழைத்து அதன் பின்னரே அவர்களுக்கான பரீட்சைத் திகதிகள் தற்பொழுது வழங்கப்பட்டு வருவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

நாளை சனிக்கிழமை சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. இதற்கென 4பேர் கொண்ட வாகனப் பரிசோதகர்கள் குழு அன்றையதினம் வருகைதரவுள்ளது.

(ஒ-10-8)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

7அடி நீளமும், 4அடி உயரமும், 7அடி நீளமும், 3அடி உயரமும் கொண்ட கடைப் பாவனைக்குகந்த கண்ணாடி அலுமாரிகள் 2 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.நவரததினம், இல.37, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (10809)

தரமான Prima கோழிக் குஞ்சின விலை குறைக்கப்பட்டுள்ளது. Broiler 38/-, வெள்ளைப் பேடு 46/-, சிவப்புபேடு 50/-. முன்பதிவு செய்து 28-11-2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10835)

Supper Cup Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.சம்பந்தர், 667, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (10840)

'மோட்டோ றோலா' அன்ரனா ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: S.K. துரைசிங்கம் (K.R), இல.770, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தை.(10837)

4400W கறுப்புநிற Sony Audio Vedio Set (VX-777) புதியது, வீடு அல்லது கடைப் பாவனைக்குரிய Honda ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: C/o இரத்தின சபாபதி, வைரவர் கோயிலடி, நாலு கால்மடம், ஆனைக்கோட்டை. (10833)

கடைகளுக்கு உகந்த மடிபடும் சுருக்குக் கதவுகள், ஸ்ரீல்கள், ஸ்ரீல் அலுமாரி, கடைறாக்கை, கடைப் பூட்டுக்கள் என்பன விற்பனைக்குண்டு. 40/2, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (10828)

## மணமகள் தேவை

றோமன் கத்தோலிக்க மதம், 1973, புநர்பூசம், செவ்வாய்க் குற்றமற்ற, G.S.ஆக வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: திருக்குமரன் மங்கள ஏஜென்சி, K.K.S. வீதி, கொக்குவில். (10750)

யாழ்.இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த, 32வயதுடைய, ரேவதி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 42 உடைய, பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 1705, C/o உதயன். (10831)

## சித்தமருத்துவ கற்கைநெறிக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவக் கற்கைநெறியைத் தொடர்வதற்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் அன்றையதினம் பல்கலைக் கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளைக்கு உரிய ஆவணங்களுடன் வருகை தரவேண்டும் என்று உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (எ)

## அறிவுறுத்தற் கூட்டம்

தென்மராட்சி,நவ.22

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான தரம் 11 பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான அறிவுறுத்தற் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்களையும் பூரணப்படுத்தப்பட்ட படிவங்களுடன் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-117)

## எயிட்ஸ் விழிப்புணர்வு செயலமர்வு

தென்மராட்சி,நவ.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் விஞ்ஞானம், உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான எயிட்ஸ் விழிப்புணர்வு செயலமர்வு இன்றும் நாளையும் காலை 9.00 மணிமுதல் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலயத்தின் தரம் 1ஏபி, 1சி ஆகிய பாடசாலைகளிலிருந்து தலா இரண்டு ஆசிரியர்களையும், தரம் II பாடசாலைகளிலிருந்து தலா ஒரு ஆசிரியரையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (எ-117)

## சமுர்த்தி அலுவலருக்கான பயிற்சி வகுப்புகள்

குருநகர்,நவ.22

யாழ்.மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளருக்கான பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமைவரை எம்பிலிப்பிட்டியாவில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளில் சுமார் 85பேர் கலந்துகொள்ள உள்ளார்கள். இவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளார்கள். (ஒ-51)

## கண்ணீர் அஞ்சலி



எமது பீடத்தைச் சேர்ந்த

### கனகசிங்கம் சண்முகதாஸ்

அவர்களின் அகால மரணத்தையிட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் துயரில் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

மாணவர் ஒன்றியம்,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(10841)

## கண்ணீர்க் காணிக்கை



### அமரர் கனகசிங்கம் சண்முகதாஸ்

*நினைவுகள் இருக்கும்வரை - நீ*
*எம்முடன் உறவாடிக் கொண்டிருப்பாய்*
*உணர்வுகள் இருக்கும்வரை - நீ*
*எம்மிலே வாழ்ந்து கொண்டிருப்பாய்!*

உன் பிரிவால் துயருறும்:
3ஆம் வருட A பிரிவு மாணவர்கள்,
விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(10842)

## திருமணநாள் வாழ்த்து

இன்று (22.11.2002) வெள்ளிக்கிழமை
திருமண பந்தத்தில் இணையும்

லட்சுமணன் - பேபிறதிகா

தம்பதியினரை பதினாறு செல்வங்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழவேண்டுமென
மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

- நண்பர்கள்.

*தவசிகுளம்,*
*கொடிகாமம்.*
(10832)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



### மேஜர் தமிழ்க்குமரன் / புலித்தேவன்

தெய்வேந்திரம் தேவரூபன் *(வவா)*

*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

தாயின் மடியில்
18-10-1980

மண்ணின் மடியில்
22-11-2001

எம் குடும்பத்து சின்னப்பூவே தமிழ்க்குமரா!
எம் தலைவன் பாதையிலே தடம்பதித்த புலித்தேவா!
ஊர்மீட்கவென உறுதிகொண்டு நீ தவழ்ந்த
யாழ்.மண்ணில் சாதனைகள் பல படைத்துவிட்டு
வன்னி மண்நோக்கி புறப்பட்டாயா? எதிரியின்
மரணத்தை நிச்சயிக்கும் நீ எப்படி வீரமரணமானாய்?
ஓராண்டாகியும் உன் உடன்பிறப்புகள்
துடிக்கின்றனர் மீள வருவாயா? உன் கல்லறை
மீது மலர் தூவி வணங்குகின்றோம்.
ஈடேறட்டும் மாவீரனே உன் இலட்சியக் கனவு.

இன்று (22.11.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவு நாளிலும் மலர் வணக்க நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரை யும் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
*மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.*
(10834)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
10 - 02 - 1945

மறைவு
23 - 10 - 2002

### அமரர் ஆறுமுகம் சிவானந்தம்

(தரம் I - கணித ஆசிரியர்,
யா/மாதகல் சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை)

*மாதகல் பெற்றெடுத்த பெருமகனாய்*
*அன்பின் பிறப்பிடமாய், பண்பின் இருப்பிடமாய்*
*அனைவருக்கும் அறிவூட்டும் வித்தகனாய்*
*எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவே இனியவழி கூறி*
*நேசமுடன் எமைக் காத்த பாசமிகு தெய்வமே!*
*கண்ணீரில் நாம் தவிக்க விண்ணுலகம் சென்றீரோ?*
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

*அந்தோனியார் வீதி,*
*மாதகல்.*
(10844)



# தேயிலை விவாதம் உற்சாகம் தரவில்லை கிழக்கு அபிவிருத்தியில் காரம் - சாரம்

தேநீரை அருந்தினால் உற்சாகமாக இருக்கும் என்பது நியதி. ஆனால், அந்தத் தேயிலை உற்பத்திக்குப் பொறுப்பான பெருந்தோட்டத்துறை தொடர்பான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதம் சுவையற்றதாகவும் சிறிதும் உற்சாகம் தரமுடியாததுமாகவே அமைந்திருந்தது.

அரசுத் தரப்பிலும் எதிர்க்கட்சித் தரப்பிலும் பேசிய உறுப்பினர்கள் எல்லோரும் புள்ளிவிவரங்களை சமர்ப்பித்துப் பேசினார்கள். அதேவேளை, மாறிமாறி ஒருவர் மீது ஒருவர் குற்றஞ் சுமத்திக் கொண்டிருந்தார்கள்.

நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது. கூடியவுடன் வாய்மூலக் கேள்விகளுக்கான விடைகள் பதினைந்து நிமிடங்களுக்கு அளிக்கப்பட்டன. ஆக ஏழு கேள்விகள் மட்டுமே கேட்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பின், நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சரும், பௌத்த சாசன அமைச்சருமான டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார சபாநாயகரின் முன் அனுமதியுடன் விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசினார்.

கண்டியில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அக்கட்சி உறுப்பினர்களான சரத் அமுனுகம, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் பௌத்த மகா சங்கத்தினரையும், பௌத்த பீடாதிபதிகளையும் இழிவுபடுத்தும் வகையில் பேசியுள்ளனர்.

மகா சங்கத்தினர் தூங்குகின்றார்களா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது பௌத்த மதத்தையே அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்தச் செய்தி தேசியப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்துள்ளது. இந்த உறுப்பினர்களின் பேச்சு பொறுப்பற்றதும், விசனத்திற்குரியதுமாக அமைந்துள்ளது என்று அமைச்சர் லொக்கு பண்டார குறிப்பிட்டார்.

இவ்வேளையில், எதிரணி உறுப்பினர்களான டி.எம்.ஜயரத்னவும், மங்கள சமரவீரவும் இதனை ஆட்சேபித்தனர். தனிப்பட்ட உறுப்பினர்களின் பெயர் குறித்து குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதனை நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து அகற்றவேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர்.

ஆனால், சபாநாயகர் இதனை ஏற்கவில்லை. மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பத்திரிகையில் வந்த விடயத்தை ஆதாரம் காட்டியே அமைச்சர் பேசினார். மேலும், பௌத்த சாசன அமைச்சர் என்ற வகையில் பௌத்தமதம் பற்றி அவதூறான பேசசுக்கள் வரும்போது அவைபற்றிப் பேசும் உரிமை அவருக்குண்டு என்று சபாநாயகர் கூறினார்.

எனினும், எதிரணி உறுப்பினர்கள் அதனை ஏற்கமறுத்தனர். இதனால், ஆளுங்கட்சி அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, அஸ்வர் ஆகியோருக்கும் எதிரணியினரான மங்கள சமரவீர, டி.எம்.ஜயரத்ன ஆகியோருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆனால், இவ்விடயம் தொடர்பாக மேலதிக விவரம் தேவைப்படின் தம்மைத் தனிப்பட்ட முறையில் வந்து சந்திக்கும்படி கூறி, சபாநாயகர் இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

தொடர்ந்து பெருந்தோட்டத்துறைகள் அமைச்சுக்கான குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

நுவரெலியா மாவட்ட பொ.ஐ.முன்னணி உறுப்பினரான வி.புத்திரசிகாமணி விவாதத்தை ஆரம்பித்தார். பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களின் அவலநிலையை அவர் தெளிவுபடுத்தினார். மாறிமாறி வந்த அரசுகள் தோட்டத் தொழிலாளர்களைப் புறக்கணித்தே வந்துள்ளன என்றும் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, அரசுத் தரப்பில் இருந்து அமைச்சர் பி.சந்திரசேகரனும், கே.வேலாயுதமும் உரையாற்றினார்கள். அரசுத் தரப்பு உறுப்பினர் வக்காலத்து வாங்கிப் பக்கப்பாட்டுப் பாடுவதுதான் வழமை. ஆனால், இவர்கள் இருவரும் அரச தரப்பில் இருந்தாலும் சற்று வித்தியாசமாகவே உரையாற்றினர்.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் அரசு தலையிடக்கூடாது என்று அரச தரப்பில் கூறப்பட்ட கருத்தை இவர்கள் ஏற்க மறுத்தனர். தோட்டத்தை மட்டும்தானே கம்பனிகளுக்குக் கொடுத்தீர்கள். தொழிலாளர்களைக் கொடுக்கவில்லையே. ஆனால், தொழிலாளர் சம்பள விடயத்தில் அரசு தலையிடவேண்டிய கட்டாயம் இருக்காது என்று அவர்கள் வலியுறுத்தினர்.

பதுளை மாவட்ட எம்.பி. வேலாயுதம், கம்பனிக்காரர்களின் சுரண்டல்களைப் புள்ளிவிவரத்துடன் சுட்டிக்காட்டினார். தங்களுடைய சம்பளம், போக்குவரத்து மற்றும் அலவன்ஸ் என்பவற்றிற்கும் மேலாக நிர்வாக மேற்பார்வை என்ற பெயரில் பல கோடி ரூபாவை ஏப்பம்விடுகின்றனர் என்றும் புட்டுவைத்தார்.

ஜே.வி.பி. உறுப்பினரான ஆர்.சந்திரசேகரன் பேசுகையில், தோட்டத் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சும் கம்பனிக்காரர்களும் அரசும் தோட்டத் தொழிலாளர்களை உதாசீனஞ்செய்துவிட்டனர். மலையகத்தில் பட்டினிச் சாவுகள் அதிகரித்துவிட்டன என்று குறைகூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் பெரிதாக அக்கறை கொள்ளவும் இல்லை; அலட்டிக் கொள்ளவும் இல்லை.

பெருந்தோட்டத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர்களான லக்ஷ்மன் கிரிஎல்ல, நவீன் திஸாநாயக்க, சுஸந்த புஞ்சிநிலமே ஆகியோரும் பேசினார்கள்.

பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி செய்யப்படும், நவீன மயப்படுத்தப்படும், தொழிலாளர்களுக்கு வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் - தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள். ஆனால், சம்பள உயர்வு தொடர்பாக ஒரு வார்த்தையேனும் கூறவில்லை. அத்துடன் பெருந்தோட்டத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் ஆரவாரமின்றி முடிவுற்றது. ஒதுக்கீடுகளும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

மதியஉணவு இடைவேளைக்குப் பின் துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பற்றுறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சுக்கான விவாதம் ஆரம்பமானது.

இடைவேளைக்குப்பின் நடைபெற்ற விவாதம் சற்றுச் சூடு பிடித்தது. சம்பந்தா சம்பந்தமில்லாத விடயங்கள் பல இங்கே சந்திக்கு இழுக்கப்பட்டன. திருகோணமலை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான எம்.கே.டி.குணவர்த்தன பேசும் போது, முஸ்லிம்களுக்காக மேலும் அக்கறையுடன் கண்ணீர் வடித்தார்.

மற்றும் ஓர் எதிரணி உறுப்பினரான ரெஜி ரணதுங்க, இந்த அரசும் திருகோணமலைத் துறைமுகத்தைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டது. உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்குக் கூட புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைக் கூட்டிக்கொண்டு செல்லும் வெட்கக்கேடான நிலை ஏற்பட்டுவிட்டது என்றும் கூறினார். இதனை அமைச்சர் ரவூப் ஹக்கீம் முற்றாக நிராகரித்தார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான விவாதம் நடைபெற்றபோது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குமிடையில் கடுமையான வாக்குவாதமும் கருத்து மோதல்களும் இடம்பெற்றன.

ஆளுந்தரப்பில் அமைச்சர் தி. மகேஸ்வரன் உரையாற்றியபோது, முஸ்லிம் உறுப்பினர்கள் அவர்மீது பாய்ந்துவிழுந்தனர்.

வடக்கே முஸ்லிம்களைத் தமிழர்கள் தாக்கினர் என்றும், கிழக்கில் தமிழர்களை முஸ்லிம்கள் தாக்கினார்கள் என்றும், கிழக்கில் தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும் தமிழ், முஸ்லிம் எம்.பிகள் தமக்குள் தாக்குதல்களை நடத்திக்கொண்டனர். மோதல்கள் மும்முரமாக நடந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் எம்.பி. எந்தவிதமான உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் தன்பாட்டில் இருந்தார். அவரின் கண்கள் மூடியிருந்தன. எவரும் அவரைக் குழப்பவில்லை.

இந்த விவாதத்தின்போது எதிரணித் தரப்பில் பேசிய ஹிஸ்புல்லாஹ் எம்.பி., கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதி போதாது. இதற்கென ஒரு தனி அமைச்சு அவசியம் தானா என்று கேட்டார்.

எதிரணியின் மற்றோர் உறுப்பினரான சேகு இஸ்ஸதீன், கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சராக கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பி. ஒருவர் ஏன நியமிக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

கிழக்கு அபிவிருத்தி அமைச்சு சம்பந்தமான விவாதம் காரசாரமாகவும் சூடாகவும் இருந்தாலும், அது




ஒருவரை ஒருவர் பண்படுத்தும் வகையில் அமைந்துவிட்டதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

**அமைச்சர் ஹக்கீம்**

இவற்றையெல்லாம் அமைதியாகச் செவிமத்துக் கொண்டிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் இறுதியில் வேதனை தொனிக்கப் பதிலளித்துப் பேசினார்.

இந்த விவாதத்தில் பேசிய தமிழ் எம்பிக்கள் எனது மனதைப் புண்படுத்தும் வகையிலும் இனக்குரோதத்தை ஏற்படுத்தும் வகையிலும் உரையாற்றினர். நான் ஓர் இனவாதி அல்லன்; எந்த ஒரு சமூகத்தையும் இழிவுபடுத்துபவனும் அல்லன்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்; தமிழர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன என்று கூறுவது தவறு.

கிழக்கு மாகாணத்தில் இழப்பீடுகள் வழங்கப்பட்டபோது தமிழர்களுக்கே ஆகக்கூடுதலான தொகைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

எந்தவோர் அமைச்சரும் செய்ய முடியாத வகையில் மறைந்த தலைவர் அஷ்ரப் 400 தமிழர்களுக்கு துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையில தொழில் வழங்கியுள்ளார்.

நாம் தமிழர்களைப் புறக்கணிக்கிறோம் என்பதை உறுதிப்படுத்தினால நான் எனது பதவியை இராஜினாமாச் செய்யவும் தயார் என்றார் அமைச்சர் ஹக்கீம்.

வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டும் என்று நான் ஒருபோதும் கேட்கவில்லை. முஸ்லிம்களுக்கு தனி அலகு கேட்கிறோம். இதை இனவாதம் என்று எங்கள்மீது சேறு பூசக் கூடாது என்றும் அமைச்சர் கூறினார். அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

விவாதத்தில் கலந்துகொண்ட எம்.பிக்களின் பேச்சுக்களிலிருந்து சில பகுதிகள் இதோ.

**இரா.சம்பந்தன் (த.வி.கூ. எம்.பி.)**

மூதூர், திருகோணமலை மற்றும் காஞ்சிரங்குடாப் பகுதிகளில் பாதிகப்பட்டவர்களுக்கு மிகவிரைவில் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

கிழக்கில் மக்கள் மீள்குடியமர்வதற்கும் அவர்களின் வீடுகளை மீளக்கட்டவும் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி மேலும் அதிகரிக்கப்படவேண்டும். 65 ஆயிரம் ரூபாவாக இருக்கும் அத்தொகை, ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு, அதை ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியம்.

இந்துக் கோவில்களை புனரமைக்கவும், அரச ஊழியர்களுக்கு உரிய நஷ்டஈடு கிடைக்கவும் வழி செய்யப்பட வேண்டும் - இப்படி அவர் கேட்டுக்கொண்டார்.

**எச்.எம்.ஹரீஸ் (மு.கா.எம்.பி.)**

முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.ஹரீஸ் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

முஸ்லிம்களுக்கு தனி அலகு வேண்டும் என்ற கோரிக்கையை ஜே.வி.பி. பொதுஜன ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளே ஆதரிக்கின்றன. நிலைமை இப்படி இருக்க இணைந்து வாழவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

முஸ்லிம் சமுதாயம் அடிமை சமுதாயமாக இருக்கமுடியாது. தமிழ்-முஸ்லிம் சமுதாயங்கள் இணைந்திருக்கவேண்டும் என்று வாயால் மட்டும் கூறும் புலிகள் இயக்கம், முஸ்லிம்களை அடிமைத்தனமாக நடத்துகின்றது. எனவே, முஸ்லிம் சமுதாயம எல்லாவற்றையும் விட்டு எப்பொழுதும பொறுமையாக இருக்கமுடியாது. எமது பொறுமைக்கும் எல்லை உண்டு. அதனால்தான் நாம் நாடாளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டோம் - இவ்வாறு அவர் கூறினார்.

**அமைச்சர் தி.மகேஸ்வரன்**

இந்து விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதற்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றதோ, அதேமாதிரி கிழக்கில் தமிழர்கள் மீளக்குடியமரவும் வழிசெய்ய வேண்டும். கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மக்கள் பலர் தமது சொத்துக்களையும் உடைமைகளையும் இழந்துள்ளனர். சிலர் உயிரிழந்தும் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

பெற்றோரை இழந்த பிள்ளைகள், கணவரை இழந்த பெண்கள் ஆகியோர் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் 19 அனாதை இல்லங்கள் உள்ளன. இவர்கள்மீதும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சு கவனஞ்செலுத்த வேண்டும். தமிழ்மக்கள் புறக்கணிக்கப்படக் கூடாது - இப்படி அவர் கூறினார். (எ)

# தோட்டத் தொழிலாளருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்

## அமைச்சர் கிரிஎல்ல சபையில் அறிவிப்பு

தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அதிவிரைவில் அறிமுகப்படுத்தப்படும். இது தொடர்பான சிபாரிசுகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று பெருந்தோட்டத் துறைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

தனது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் பேசும்போதே இதனை அவர் அறிவித்தார்.

இலங்கையில் ஓய்வூதியம் என்று ஒன்றைப்பெறாமல் தொழில்புரியும் ஒரே துறையினர் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமே. இதனாலேயே தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு மாற்றுத் தொழில்களை நாடிச் செல்கின்றனர். இதனால், தோட்டத் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை வகுத்துள்ளோம்.

அடுத்த ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களுக்காக 15,000 வீடுகள் அமைக்கப்படும். பத்தாயிரம் வீடுகள் நுவரெலியா மாவட்டத்தில் அமையும்.

சிறுதோட்டத் தேயிலை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில மீள்நடுகைக்காக ஒரு ஹெக்டேயருக்கு ஒன்றரை லட்ச ரூபா மானியம் வழங்கப்படுகின்றது.

தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் என்பனவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 85சதவீதம் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காகவே செலவிடப்படுகின்றது. 15 சதவீதமே அபிவிருத்திகளுக்காக எடுக்கப்படுகிறது.

எனினும், எதிர்காலத்தில் இவ்விரு நிறுவனங்களும் நவீனமயப்படுத்தப்படும். தோட்டங்கள் துண்டாடிவிற்கப்படுவதும் சட்டரீதியாக தடை செய்யப்படும் என்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல கூறினார். (எ)

### திருமலைத் துறைமுகம், கடற்படைத் தளம்:

# எதிர்க்கட்சியினரின் புகாருக்கு அமைச்சர் ஹக்கீம் மறுப்பு

திருகோணமலை துறைமுகம் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. கடற்படையின் பிரதான தலைமையகம் திருமலையில் இருந்து எந்தச் சந்தர்ப்பத்திலும் அகற்றப்படமாட்டாது. பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ரெஜி ரணதுங்க கூறுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்றார் துறைமுக அபிவிருத்தி, கப்பற்றுறை அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

மேற்படி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான ரெஜி ரணதுங்க, திருமலைத் துறைமுகத்தை, அரசு, புலிகளிடம் ஒப்படைத்துவிட்டது. அங்கே காலங்காலமாக இயங்கிவந்த கடற்படையும் அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளது.

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் திருமலைத் துறைமுக நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடமுடியாது என்று குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் ரவூப் ஹக்கீம், பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் கூறிய விடயங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை. நாட்டில் சகல பகுதிகளிலுமுள்ள துறைமுகங்களும் எமது அமைச்சின் நிர்வாகத்திலேயே இருக்கின்றன. இவர்கள் கூறுவது போல் திருமலைத் துறைமுகத்தை எவரிடமும் கையளித்துவிடவில்லை.

உண்மைக்கு மாறான விடயங்களை வெளியிட்டு நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முனையக்கூடாது.

கடந்த காலங்களைவிட துறைமுகங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் அதிகரித்துள்ளது. இங்குவரும் கப்பல்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கட்டுநாயக்க விமான நிலையம் தாக்கப்பட்டபோது சிறிது சரிவு ஏற்பட்டபோதிலும் இப்போது நிலைமை சீரடைந்துள்ளது.

துறைமுக நிர்வாகமும், தொழிற்சங்க ஒத்துழைப்பும் சிறப்பாகவே இருக்கின்றன. துறைமுக அபிவிருத்திச் சபையில் மேலதிகமாகப் பணிபுரியும் ஊழியர்கள் சுயமாக ஓய்வுபெறும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பத்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றியவர்கள் சுயமாகப் பதவி விலகும்போது நியாயமான ஒரு தொகை நஷ்டஈடாக வழங்கப்படும். இது தொழிற்சங்கங்களுடன் பேசித்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, பிராந்திய ரீதியாக அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அம்பாந்தோட்ட துறைமுக நிர்மாண வேலைகள் அதிவிரைவில் ஆரம்பிக்கப்படும். மேலும் ஒலுவில் துறைமுக அபிவிருத்தித் திட்டம் துரிதப்படுத்தப்படும்.

விசேடமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பிரயாணிகள் போக்குவரத்து கப்பற்சேவை அதிவிரைவில் ஆரம்பிக்கப்படும். இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படுகிறது.

இக்கப்பற்சேவை கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையில் நடைபெறும்- இப்படி அவர் கூறினார். (எ)

## தீவகவலய பண்ணிசைப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

தீவகக் கல்வி வலயத்தினால் இன்று வெள்ளிக்கிழமை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த வலயமட்ட பண்ணிசைப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(எ)

## தீவகத்தில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.22

மானிப்பாய் பரிஸ் லியோக் கழகமும் தீவக லயன்ஸ் கழகமும் இணைந்து தீவக வலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கை நடத்தவுள்ளன.

இக்கருத்தரங்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நாளையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9மணி முதல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-9)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியையான

**திருமதி S.அழகரட்ணம்**

அவர்கள் காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(10862)

## சாயிபாபா அவதாரதினம்

சுன்னாகம், மயிலணி பகவான் ஸ்ரீ சத்தியசாயிசேவா நிலையத்தினர்கள் பகவானின் அவதாரதினத்தை 23.11.2002 சனிக்கிழமை விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். விழா சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஓம்கார பஜனையுடன் ஆரம்பமாகும். பல்கலைக்கழக சங்கீத பீடத்தலைவர் கலாநிதி N.V.M.நவரத்தினம் அவர்களின் விஷேட சொற்பொழிவும் நடைபெற்று, திருவூஞ்சல் நிகழ்ச்சியுடன் நிறைவுபெறும். சாயி அன்பர்கள் இவ்விழாவில் பங்குபற்றி சுவாமியின் அருள் ஆசியைப் பெறுவீர்களாக!

-ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தினர்.

(10855)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 19 - 07 - 1925

மறைவு 23 - 10 - 2002

### அமரர் இராமலிங்கம் குமாரசாமி

(இளைப்பாறிய அதிபர்)

*ஆண்டுகள் பல எம்முடன் வாழ்ந்து*
*ஆசையுடன் எம்மை அரவணைத்து*
*பாசமுடன் வாழ்ந்த தெய்வமே!*
***உங்கள் நினைவை என்றென்றும் மறக்க மாட்டோம்.***

23-10-2002 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக்கிரியைகளும் 24.11.2002 ஞாயிறு அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வீட்டுக் கிருத்திய நிகழ்வில் கலந்து அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

தங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

(10851)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28 - 12 - 1947

உதிர்வு 03 - 12 - 2001

### அமரர் S.ஷண்முகலிங்கம்

(மணிக்குரல் மேஜர் ஷண்,
ஷண் றெக்கோடிங் ஸ்பொட் உரிமையாளர்)

*அன்பின் உறைவிடமே! பண்பின் இருப்பிடமே!!*
*பாசத்தின் மையமே!!!*
*நட்பின் சிகரமெனத் திகழ்ந்தீர்கள்!*
*விளம்பரப் புயலாக மேடைகளில்*
*சிம்மக் குரலினால் ரசிகர்களைக் கவர்ந்தீர்கள்!*
*நட்புக்கு இலக்கணம் வகுத்து நின்றீர்கள்!*
*நாளும் இனிதே பேசி நின்றீர்கள்!*
*விளம்பரத்துறையிலே **மணிக்குரல் மேஜர் ஷண்** ஆகி நின்றீர்கள்!*
*எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்று*
*வருடம் ஒன்று ஆனாலும் உங்கள் நினைவுகள்*
*எம்மை விட்டு அகலாது.*

ஷண் ஒடியோ & ஷோரூம்
421A, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்,
24/2, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

(10850)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி துரைராசா

*(கிருஸ்ணபிள்ளை - கரவெட்டி)*

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைராசா நேற்று (21.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னாச்சி தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற கனகம்மா அவர்களின் அன்புக் கணவரும் அருந்தவசீலனின்(ஆசிரியர்) அருமைத் தந்தையாரும், நீலறோஜினியின் (கோகிலா) பாசமிகு மாமனாரும் இராஜேஸ்வரி, சரஸ்வதி, தேவி (மீசாலை), கண்மணி, கோபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி, தவராசா, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் திரு.திருமதி செல்லையா (மீசாலை) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

*கரவெட்டி மேற்கு, கரவெட்டி.*

தகவல்:
து.அருந்தவசீலன் (சீலன்-மகன்)

(C/25008)

# றிச்சாட் அப்பியாசப் புத்தகம்

[றிசட் அப்பியாசப் புத்தகம்]

றிச்சாட் றேடிங் கம்பனி ஸ்தாபனத்தார்

**தற்போது யாழ்.குடாநாட்டில்**

உங்களைச் சந்திக்கின்றார்கள்!

குறைந்த விலை

நிறைந்த தரம்




மொத்த வியாபாரிகளே!

இதோ உங்கள் கைகளுக்கு

**40 பக்க அப்பியாசப் புத்தகம் 100 இற்கு 4.35**

**80 பக்க அப்பியாசப் புத்தகம் 100 இற்கு 8.50**

120, 160, 200, 240, 320, 400 பக்கங்கள் கொண்ட அப்பியாசப் புத்தகங்களும் குறைவான விலைகளில் விநியோகிக்கப்படும்.

- இலங்கை வர்ணப்பட அப்பியாசக் கொப்பிகளின் முன்னோடிகள்.
- உலகப் புகழ் வாய்ந்த **(WALT DISNEY)** நிறுவனத்தின் உரிமத்தைப் பெற்ற நிறுவனம்.
- உலகப் புகழ்வாய்ந்த **(WALT DISNEY)** அப்பியாசப் புத்தகங்கள்.
- மேலும் பல வகை.
- 11 வகையான சந்தைப்படுத்தும் உயர் தர அப்பியாசப் புத்தகங்கள்.
- குறைந்த விலையில் உயர்ந்த தரம்.
- 800 வகையான பொருள்களின் உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளரும்.

**றிச்சாட் கம்பனி விற்பனையாளர் உங்களைச் சந்திப்பதற்காக தற்போது பொருள்களுடன் வாகனம் மூலம் வந்துள்ளார்கள்.**

*இரண்டு வாரங்களில் எமது உற்பத்திகளை வாங்குவோருக்கு பரிசு வழங்கும் திட்டம் ஆரம்பமாகும்.*
*அப்போது விவரங்கள்யும் கூப்பன்களையும் விநியோகஸ்தர்களிடம் பெறலாம்.*

**யாழ் விநியோகஸ்தர்:**

**S.J. & B றேட் ஏஜென்சி**
இல. 39, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2549

**றிச்சாட் றேடிங் கம்பனி**
64, பெறக்கும்பா வீதி, குருநாகல்.
தொலைபேசி: 037 . .547, 33298/9
தொலைநகல்: 074 690701

(10822)

# குருவாய் வருவாய் குகனே!

நாம் எல்லோரும் ஆசானிடம் கேட்டுணர்ந்த கல்வி அறிவையும், இயற்கையாக நம் அனுபவத்தின்மூலம் பெற்ற பட்டறிவையும் பெறும்பொருட்டு



மெய்ஞ்ஞான வேலை ஏந்திய முருக வேள் அவராகவே நமக்கு அருள் வழங்கினார். அல்லாமலும் அறநூல்களையும் அருள் நூல்களையும் கற்றுணர்ந்து நிற்றலாகிய கருவி அறிவையும், சிந்தித்து தெளிந்து 'வாலறிவன் நற்றாள் தொழுது' நிற்றலாகிய மெய்யறிவு அல்லது பேரறிவையும், எமக்கு வழங்குபவரும் முருகப் பெருமானேயாவார்.

இதனை அருணகிரிநாதர் கந்தர் அநுபூதியில் உள்ள பதினேழாவது பாடலிலேயே "யாம் ஓதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்" என்றார்.

இதில் தானாகவே முருகன் எமகுத் தந்தார் என்ற கருத்து ஒருபுறம் இருக்க, அந்த நல்லறிவின்மூலம் பெறும் பயனைத் தாமே பெற்றுக் கொள்ளவுமாக எமக்குத் தந்தார் என்ற சிறப்புக் கருத்தையும் நாம் உணர்தல் வேண்டும்.

இதற்கு எடுத்துக்காட்டாக - 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலரின் திருமந்திர வாக்கைக் கூறலாம்.

தமிழ்த் தெய்வமாகிய முருகன் தமிழையும் தமிழறிவையும் அடியார்களிடம் தந்து அடியார்கள் "தமிழோடு இசைபாட"த் தம் செவியால் உண்டு களிகூர்கிறான். "முத்தமிழால் வைதாரையும் அவன் வாழவைப்பான்". ஔவைக்குச் சுட்ட பழம் தந்து - இனிதான தமிழ்ப்பாடலை செவிமடுத்த செய்தியும் அருணகிரி செந்தமிழ பாட்டிலே நினைவுற்ற செய்தியும் நக்கீரர், அகத்தியர், பரராசப் புதல்வர்கள், பாம்பன் அடிகள், குமரகுருபரர் - போன்றோருக்குச் "செந்தமிழ் நூல் விரித்த" சிறப்பும் எண்ணியெண்ணி இறும்பூதெய்தற்குரியன.

முருகனை கருணாமூர்த்தி, குணபூதரன், கிருபாகரன், சிவஞானோபதேசிகன், சிவயோகதயாபரன், மறைநாயகன் என்றெல்லாம் அருணகிரியார் விழிப்பார். சினமும்; சினத்தால் வரும் மயக்கமும் ஆகிய மயக்க அறிவு அடியோடு அழியுமாறு உண்மைப் பொருளை முருகன் அவருக்கு உபதேசித்தார்.

இதனால் முருகனே தனக்குக் குருநாதன், ஆதிகுருவும் அவனே. தட்சணாமூர்த்திக்கு பிரணவத்தை

**நா.க.சண்முகநாதபிள்ளை.**

உபதேசித்த சிவகுருவும் அவனே என்றுணர்ந்தார். முருகனுடைய அருட்பரிவால் ஆசையாகிய சங்கிலி பொடிப் பொடியாகத் துகள் பட்டொழிந்தது. ஒளிவு மறைப்பின்றி இன்னார்இனியர் என்றில்லாமல், அறிவு குலைந்து மிகவும் உள்ளம் வாடி மயக்க உணர்ச்சி பூண்டு, நற்கதி பெறும் வழியை இழந்து வீணாகக் கெட்டொழிந்த தனக்கு அனுபவ ஞானத்தைத் தந்து முருகன் ஆட்கொண்டதை எண்ணி இன்பமடைந்தார்.

கல்வியைப் போதிப்போர் தாம் கற்ற கல்வியை முழுமையாக மாணவர்களுக்குப் போதிப்பதே அவர்களுக்கு கண்ணுடைய வாழ்வைத் தரும். தாம் அறிந்த கலைகளைப் பிறருக்குப் போதிப்பதே ஞானதானமாகும். ஞானதானமே கற்பிப்போருக்கும் கற்போருக்கும் பிறவிகள்தோறும பின்சென்று உதவும். ஒப்புரவு, கண்ணோட்டம், சான்றாண்மை என்பன கல்விசார் முயற்சிகள் அனைத்திலும ஒளிகாலவேண்டும். இதனை உணர்ந்த

## ஞானக்கதிர்

அருணகிரியார் கந்தர் அநுபூதி 45 ஆம் பாடலில், "பரவாகிய கல்வியுளார் கடைசென்று இரவாவகை மெய்ப் பொருள் ஈகுவையோ" என்று முருகனை வேண்டுகிறார்.

அருணகிரியார் உண்மை ஞானம் பெற்றவர். தம்பொருட்டு இப்பாடலைப் பாடவில்லை. ஞானத்தைப் பெற விரும்பும் மற்றவர்களுக்கு முருகன் அருள் வேண்டும் என்றே பாடினார்.

நமது அறியாமையைப் போக்கி நெறிவழியில் செலுத்தவல்ல திருவுருவமே குருவுருவும் என அவர் உணர்ந்தார்; உணர்த்தினார்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே".

## பரந்தன் இந்து வித்தியாலயம் சொந்த இடத்தில்

பரந்தன் இந்து மகா வித்தியாலயம் நேற்றுமுன்தினம் முதல் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

பாடசாலை அதிபர் சி.திரவியம் தலைமையில் நடைபெற்ற இதற்கான ஆரம்ப விழாவில் கண்டாவளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.சிற்றம்பலம் புதிய பாடசாலை மண்டபத்தை நாடாவெட்டி ஆரம்பித்துவைத்தார்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய கொட்டகையில் தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான வகுப்புகள் நடைபெறவுள்ளதாகவும் -

தரம் 6முதல் தரம் 13 வரையான வகுப்புகள் எதிர்வரும் ஜனவரியில் இயங்குமெனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## வடமராட்சி லயன்ஸ் கழகம்

*அதிர்ஷ்ட லாபச்சீட்டு*


**24.11.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு 29.12.2002 ஞாயிறு பி.ப.4.30 மணிக்கு நடைபெறும்.**

செயலாளர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(சி-25006)

## துயர் பகிர்வு

Sow the Seeds of Love



*தந்தைக்குத் தந்தையாகவும்*
*அண்ணனுக்கு அண்ணனாகவும்*
*"அன்பு என்னும் விதைகள் விதைத்து"*
*பாசமுடன் நேசித்து வளர்த்து ஆளாக்கிய*
*ஆருயிர் அண்ணா* ***நடேசபிள்ளை ஸ்ரீதரன்***
*இக்குவலயத்தை விட்டு நீங்கியதையிட்டு -*
*ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும்*

எமது கழக மூத்த தலைவர் றோட்டரியன் **ஈ.சரவணபவன், Ann யசோதை சரவணபவன்,** இந்நாள் தலைவர் றோட்டேரியன் **வித்தியாதரன்** அவர்கள் தம் குடும்பத்தினர் அனைவரது உள்ளங்களையும் எமது இந்த அச்சு ஊடாக வார்த்தைகள் சிறிதளவேனும் ஆற்றுப்படுத்தப் போவதில்லையென்பது எமக்கு நன்கு தெரியும். இருப்பினும் மைத்துனன், அண்ணா என்ற ஸ்தானத்திலிருந்து உங்களையெல்லாம் நாடறிந்தவர்களாகவும், துணிச்சல் மிக்க ஊடகவியலாளராகவும் வைகை பொய்கையெல்லாம் புகழ்பூக்க வைத்துச்சென்றுள்ள அவர் ஒரு பெருந்தகை என்றதை நினைந்து சற்றே ஆறுதல் அடைவீராக!

- யாழ். றோட்டறிக் கழகத்தினர் -

(சி-25004)


## ஏசியன் எலெக்ரோனிக் சென்ரரின் விஷேட விலைக்குறைப்பு

புதிய, பழைய சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள் அடங்கிய ஓடியோ, வீடியோ CDக்களையும் மின்சார இலத்திரனியல் பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட விலைக்குறைப்புடன் பெற்றுக்கொள்ள...

**ஏசியன் எலெக்ரோனிக் சென்ரர்**

இல.11/4, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 0777 - 785549

(10846)



## புதுக்கடைத் திறப்புவிழா

காலம் - இன்று (22.11.2002) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி

## ஹொண்டா மோட்டோர்ஸ்

# HONDA MOTORS

இல.305/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்.

(10845)


## மரண அறிவித்தல்

### கந்தையா மனோகரன்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மனோகரன் 20.11.2002 புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசமணி தம்பதிகளின் புதல்வனும் ஸ்ரீதரன்(கொக்குவில்), மகேந்திரன்(ஜேர்மனி), ஸ்ரீமதி(லண்டன்), ஸ்ரீகாந்தன்(ஜேர்மனி), ஜீவகாந்தன்(ஜேர்மனி), பாஸ்கரன்(ஹொலண்ட்), தயாபரன்(லண்டன்), ரேணுகா(அமெரிக்கா) மற்றும் காலஞ்சென்றவர்களான நடேசன், ஸ்ரீரதி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன் மற்றும் சற்குணராஜா(லண்டன்), ஸ்ரீனிவாசன்(அமெரிக்கா), சரஸ்வதிதேவி, வடிவாம்பிகை(கொழும்பு), கலாவதிதேவி(ஜேர்மனி), வசந்தி(ஜேர்மனி), ரஜிதா(ஹொலண்ட்), கிருபாலினி(லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகலிங்கம் வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

தகவல்:
ஸ்ரீதரன் (சகோதரன்)

(10847)


## சனிக்கிழமை அதிர்ஷடம்

உத்தியோகபூர்வ முடிவுகள்



செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2211336 இருந்து 2228253 வரை
சீட்டிழுப்பு இல. 1351
திகதி 20.11.2002



**வெற்றி எண்கள்**

**27 33 35 46 52**

போனஸ் எண் **09**

**ஜக்பொட் பரிசு**

**ரூபா.3,229,750/-** வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,229,750/- | 3,229,750/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 94 | 10,000/- | 940,000/- |
| 3 | 5,207 | 500/- | 2,603,500/- |
| 2 | 87,600 | 20/- | 1,752,000/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 27ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 107,552 | 10/- | 1,075,520/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,800,770/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா. 1,500,000/-**

தொடர் இல. 3206364க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 23ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2222783-3-62
2222966-7-32
2215642-3-35
2218088-8-04
2225947-2-92

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M



'புலிகளின் குரல்' வானொலியின் 12ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த விழாவில் புலிகளின் சமாதானச் செயலணியின் செயலாளர் புலித்தேவன், புலிகளின் அரசியல் பிரமுகர் வே.பாலகுமரன் ஆகியோர் உரையாற்றுவதையும் - போராளிப் படைப்பாளி ஒருவருக்கு தேசியத் தலைவரின் பரிசு மற்றும் சான்றிதழை புலித்தேவன் வழங்குவதையும் - விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த மாதவன் மாஸ்ரர், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோர் உட்பட பங்கேற்றோரில் ஒரு பகுதியினரையும் - படங்களில் காணலாம். (படங்கள்:வசந்தன்)

# சேவைநலன் பாராட்டு

# கனகசபை சுந்தரகாந்தன் (Commerce Trd.S.L.T.S. Class - 1)

## உப அதிபர் - யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

திரு.க.சுந்தரகாந்தன் எங்கள் பாடசாலையின் பிரதி அதிபர். எங்களுக்கு அதிபர். நான் அதிபராகப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்தபோது, என்னை அதிபராக ஏற்றுக்கொண்டு பாடசாலையைச் சீராக நடத்திக்கொண்டு வருகின்றவர். இலைமறைகாய்க்கு இலக்கியம் இவர். இன்றுவரை அவரது வழிகாட்டலில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறோம். அவர்கள் பாடசாலையின் உயிர், தூண், அத்திபாரம், பொறுமை, சினங்கொள்ளாமை, இனங்காணல், நிதானம், ஆளுமை, ஆற்றல், கோடாமை, நிர்வாகத்திறன் இவைகள்தான் எங்கள் பிரதி அதிபரின் அழகு.

பாடசாலையின் வளர்ச்சிக்காக பதவி ஆசை இல்லாமல் பிரச்சினையான காலங்களிலும் பாரம் சுமந்தவர் அவர். அவ்வாறு நிர்வாகத்தை நடத்தியமைதான் இப்பாடசாலை சீரான பாதையில் இயங்க வழிசமைத்தது எனலாம். பாடசாலையின் வளர்ச்சிகள் எல்லாம் அவரது மன எழுச்சிகளின் வெளிப்பாடுகள் என்பதை எண்ணும்போது பெருமையாக இருக்கின்றது.

இறுதிநாள்வரை கடமையை இறுக்கமாகவும் பொறுமையாகவும் பொறுப்பாகவும் செய்தமை அவருக்கே உரிய சிறப்பான தனித்தன்மையாகும்.

மகன் வைத்தியத்துறை, மகன் பௌதிகத்துறை, மகள் உயர்தர வகுப்பு மாணவி, மனைவி அரசாங்கத்துறையில் இருந்து ஓய்வுபெற்றவர். இதுவே அவரது குடும்பச் சிறப்புக்கள். எங்கள் பிரதி அதிபரும் அவர்தம் குடும்பமும் எதிர்காலத்தில் சீராகவும், செம்மையாகவும் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனநிறைவு அடைகிறோம்.

எங்களையும் நினையுங்கள்: திரு.த.சிவராசா.

## வரலாறு என்றும் நினைவு கூரும்

யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயம் ஆதரவற்ற சிறார்களையும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறார்களையும் அணைத்து கல்வி புகட்டும் ஒரு கொடையுள்ளம் கொண்ட வித்தியாலயம் ஆகும். இங்கு பணி செய்யும் ஆசிரியர்கள் அனைவரும் தொண்டுள்ளம் கொண்டவர்கள். ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம் இங்கே பணியாற்றிய ஆசிரியர் திரு.க.சுந்தரகாந்தன் இம்மாதம் ஓய்வுபெறுகிறார் என்ற செய்தி அனைவரையும் ஏங்க வைத்துள்ளது.

வித்தியாலயத்திற்கு வர்த்தக பாடம் போதிக்க அவர் முதல்முதலாக வந்தபோது மீண்டும் ஒரு வரலாற்று நிகழ்வு நடந்தது. முத்துத்தம்பியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு ஒரேயொரு மாணவியினுடைய எதிர்கால உயர் கல்விக்காகத் தொடக்கப்பட்டது. சுந்தரகாந்தன் ஆசிரியரது கற்பித்தல் திறன், சைவச் சிறுவர் இல்லத்தில் வாழ்ந்த அந்த மாணவியை முதல்முறையிலேயே பல்கலைக்கழகம் புகவைத்தது. காலம் கடந்தது; சுந்தரகாந்தன் ஆசிரியர் தனது கற்பித்தல் பணியுடன் உபஅதிபர் கடமையையும் செய்து வந்தார்.

இவ்வேளையில், அவருடைய பணியில் இன்னொரு நிகழ்வு சவாலாக முன்னே வந்து நின்றது. பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்த பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அங்கு ஒத்தியங்க முடியாமல் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் வந்தேறு குடியாயிற்று. ஒரேயொரு பொது மண்டபமான சுப்பிரமணிய மண்டபமும் 16 வகுப்பறைகளும் திடீரென பிறர் பயன்பாட்டுக்கு ஆகியபோது முத்துத்தம்பி மாணவர்களும் ஆசிரியர்களும் வழியறியாது கலங்கினர். தற்காலிக குடியேற்றம்தானே விரைவில் வேறிடம் பார்த்துப் போய்விடுவார்கள் என்று மனந்தளராது ஏதிலர் கல்விப் பணியைத் தொடர்ந்தனர். அவர்களில் சுந்தரகாந்தன் பணி காத்திரமானது. உரிய வளங்களை இழந்தபோதும் கற்பித்தல் பணி தொடர ஏனைய சக ஆசிரியர்களுடன் துணைநின்றார். நீண்ட 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. நிலைமை மாறவில்லை. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வெளியேறவில்லை. சிறார் கல்வி வளம்பெற யாரும் உதவவில்லை. சுந்தரகாந்தன் மீண்டும் அதிபருடன் இணைந்து, A/L வகுப்பை ஆரம்பித்தார். ஏழைகளுக்கான உயர் கல்வியை பல இன்னல்களுக்கு மத்தியில் வழங்கப் பணி செய்தார். இந்த ஆண்டும் சைவச் சிறுவர் இல்ல மாணவி முதல்முறையில் பல்கலைக்கழகம் செல்கிறாள். இதுவே ஆசிரியர் சுந்தரகாந்தன் பணிக்கு நல்ல சான்று. அவருடைய பணியை முத்துத்தம்பி வரலாறு என்றும் நினைவு கூரும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
(முன்னாள் மு.த.ம.வி. ஆசிரியை, செயலாளர், பா.அ.சங்கம்)

## யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய முதல்வரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையின் பழைய மாணவனும், பழைய மாணவர் சங்க உபதலைவருமாகிய திரு.க.சுந்தரகாந்தன் அவர்கள், தனது கல்விப் பணியிலிருந்து 2002-11.22இல்(இன்று) ஓய்வுபெறுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்பு, கருணை, தன்னடக்கம், நிர்வாகத்திறன் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் உப அதிபராகவும், எமது பழைய மாணவர் சங்க உப தலைவராகவும் கடமையாற்றி வளர்ச்சிப் பங்கில் பங்கெடுத்தமையை நினைவுகூர்வதோடு, மேலும் கல்வி, சமய, சமூகப்பணிகளை ஆற்றுவதற்கு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென வேண்டி மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சுப்பிரமணியம் யோகராசா
முதல்வர் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

## அன்புக்கும் பண்புக்குமுரிய குரு

எங்கள் பாடசாலையின் உப அதிபராக இருந்து இன்று இளைப்பாறுகின்ற எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய குருவாக இருந்த திரு.க.சுந்தரகாந்தன் அவர்களின் சேவையைப் பாராட்டி மகிழ்வதில் மாணவர் மன்றம் பெருமை கொள்கின்றது. மாணவராகிய எம்மை அன்புடனும் பண்புடனும் வழிநடத்தி நல்ல அறிவுரைகளை வழங்கி வந்தமையை எம்மால் ஒருபோதும் மறக்கமுடியாது. அவருடைய இவ்வறுபதாவது அகவையில் அவர் தம் குடும்பத்தினருடன் சீருடனும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

- மாணவர் மன்றம் -



## சேவை விபரம்

*பிறப்பு* : 22.11.1942
*வதிவிடம்:* உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்
*ஆரம்பக் கல்வி:* யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
*உயர் கல்வி:* யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, பல் தொழிநுட்பக் கல்லூரி
01.11.1968 - 19.11.1972 யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
20.01.1972 - 31.12.1973 யா/பலாலி ஆசிரிய கலாசாலை
01.01.1974 - 18.01.1976 மா/சாகிராக் கல்லூரி
19.01.1976 - 26.02.1980 மா/அஜ்மீல் ம.வி. உக்குவளை
27.02.1980 - 25.03.1980 மா/சாகிராக் கல்லூரி
26.03.1980 - 31.05.1980 வழக்காமுற முஸ்லிம் வித்தி.
01.06.1980 - 21.11.2002 யா/முத்துத்தம்பி ம.வி.
01.07.1988இல் இருந்து உப அதிபராகப் பதவியேற்றமை
01.06.1996 - 10.02.1997 வரை பதில் அதிபராக கடமையாற்றியது.

## கடமையுணர்வு மிக்க நல்லாசான்

எங்கள் பாடசாலையின் உப அதிபராக இருந்து இன்று சேவையில் இருந்து இளைப்பாறுகின்ற பேரன்புக்குரிய ஆசான் திரு.க.சுந்தரகாந்தன் அவர்களின் சேவையைப் பாராட்டி மகிழ்வதில் பெருமை கொள்கின்றது ஆசிரியர் கழகம். கற்பித்தல் பணியில் சிறப்புறக் கடமையாற்றிய அவர், உப அதிபராகப் பதவியேற்று பாடசாலை நிர்வாகத்தினை இதுவரை காலமும் திறம்பட நிர்வகித்துவந்தமை மகிழும் பாராட்டுக்குரியது. பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளாகிய விளையாட்டு மற்றும் இந்துமன்றம், மாணவர்மன்றம் போன்றவற்றின் உப தலைவராக இருந்து மன்றச் செயற்பாடுகளை நெறிப்படுத்தி அவற்றின் வெற்றிக்கு உறுதுணையாக செயற்பட்டமை என்றும் நினைகூருதற்குரியது. மற்றும் ஆசிரியர் கழகத்தலைவராக இருந்து ஆசிரியர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்குபற்றுவதுடன் எமக்கு ஆலோசனைகளை வழங்கி எம்மை வழிநடத்திச் சென்றமை என்றுமே மறக்கமுடியாது.

இன்று அவர் அறுபது அகவை அடைவதையிட்டு அகமகிழ்வதுடன் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சிறந்த நல்வாழ்வு கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்

## உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/முத்துத்தம்பி வித்தியாலயத்தின் ஆசிரியராக, உப அதிபராகக் கடமையாற்றிய திரு.கனகசபை சுந்தரககாந்தரன் தனது ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்றார். இவர் நிறைந்த கடமையுணர்வு கொண்டவரும், முன்மாதிரியானதொரு ஆசிரியராகவும் திகழ்ந்தவர். அதேபோலத் தனது அமைதியான அணுகுமுறையாலும் பொறுமையாலும் சகலரது மனதையும் வென்றெடுத்துக் கருமங்களை ஆற்றிச் சென்றவர்.

யா/முத்துத்தம்பி வித்தியாலயத்தின் உப அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளுக்கு அப்பாலும், எல்லாக் கடமைகளையும் தானே பொறுப்பேற்று எவ்விதத் தளர்வும் ஏற்படாவண்ணம் பாடசாலை நிர்வாகம் சிறப்புற அமைய உறுதுணையாக நின்றவர் அவர்.

இதன் காரணமாகப் பாடசாலைச் சமூகத்தினதும், அதிகாரிகளினதும் நன்மதிப்பைப் பெற்ற இவர், தன்னுடைய ஓய்வுகாலத்தில் சகல நலன்களுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி சு.காங்கேயன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்க் கோட்டம்.

## சுவை மணக்க ஓய்வுநிலை கண்டபேறே!

அன்பமைதி யாளுமையும் அடக்கமேன்மை
அறிவொளிரப் பதிவுகளும் கணிப்பில் நேர்த்தி
நன்நயமும் நலம்பயக்கும் சேவை நோக்கில்
நாளெல்லாம் ஆசிரியனுப அதிபனென்றே
பன்னெடுநாள் பணிபரவி முத்துத் தம்பி
பவனிவந்த இருபத்து இரண்டு வாண்டும்
சொன்ன தமிழ் சுந்தர காந்தனென்றும்
சுவைமணக்க ஓய்வுநிலை கண்டபேறே!

நல்லுளத்தில் நல்மணியாய் விளைந்த முத்து
நாடியவர்க் கென்றென்றும் துணையாம் சொத்து
பல்லறிவு வாண்மையுடன் பற்றி நின்று
பக்குவமா யாசிரியர்க்கு கருணை யாலே
சொல்லுறுதிச் சுகம்பரவ, மாணவர்க்கு
சோர்விலனாய்ப் பண்புவளர் பணிகளாற்றி
அல்லும்பக லுழைத்தஉப அதிபர் கோனே
ஆர்வமுற மேன்மைபெற்று சிறக்க நீடு!

வே.ஞானகாந்தன்
(வித்தியாலய முன்னாள் அதிபர் - தற்போதைய அதிபர், யா/இந்து ஆரம்பப் பாடசாலை)

## நல்லாசிரியர்

நல்லாசிரியர் இலக்கணம் பற்றி எடுத்துக்கூறியுள்ளார் பவணந்தி முனிவர் அவர்கள். அவர் கூறிய இலக்கணங்கள் யாவும் ஒருங்கே அமைந்த ஓர் ஆசிரியரைக் காட்டுங்கள் என்று யாராவது இந்தக் காலத்திற்கேட்டால் "ஆம்." ஓர் ஆசிரியர் இருக்கின்றார். அவர்தான் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய உப அதிபர் திரு.க.சுந்தரகாந்தன் என்று துணிந்து கூறலாம். ஆசிரியர் சேவைக்கு என்றே பிறந்தவர் திரு.க.சுந்தரகாந்தன் அவர்கள்.

நாற்றுக்கணக்கான சைவப் பாடசாலைகளை நாவலர் பெருமான் வழியில் நிறுவி, சைவத்தையும் தமிழையும் செழிப்புற வைத்தவர் இந்துபோட் சு.இராசரத்தினம் அவர்கள். முத்துத்தம்பி வித்தியாசாலையும் சைவாசிரியர் கலாசாலையும் அவரது இரு கண்கள். தமிழ் அறிஞர்கள் பலர் தோற்றுவதற்கு அடிநாதமாக அமைந்தது முத்துத்தம்பி வித்தியாசாலை. சைவாசிரியர்களை உற்பத்தி செய்து நாட்டுக்களித்த பெருமை சைவாசிரிய கலாசாலைக்கு உண்டு.

பேரறிஞரான மயிலிட்டி சி.சுவாமிநாதன், அளவெட்டி தந்த அறிவுச் செல்வம் என்ற பெருமையைப் பெற்றவரான உபஅதிபர் திரு.பொ.கைலாசபதி, இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை உள்ளிட்ட பெண்ணம்பெரியவர்கள் காலபதித்த பெருமைக்குரியது சைவாசிரிய கலாசாலை வளாகம். அந்த வளாகத்தில் அமைந்திருக்கும் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நீண்டகாலம் உப அதிபராகப் பணியாற்றும் புண்ணியப் பேறு திரு.சுந்தரகாந்தன் அவர்களுக்குக் கிடைத்தது அவர் முன்செய்த தவப்பயனாகக் காட்டுகிறது.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தன' என்ற கொள்கையினரான திரு.சுந்தரகாந்தன் அவர்கள், தாம் பிறந்த உரும்பிராய்ப்பதி சிறக்க, சங்கங்கள், சபைகள் மூலம் ஆற்றிவரும் நற்பணிகள் வியக்கத்தக்கவை. எனது பழைய மாணவர்களில் தலைசிறந்து விளங்கும் அவரது சேவையினைப் பலரும் வாழ்த்தக்கண்டு யான் மனப்பூரிப்பு அடைவதுண்டு.

திரு.க.சுந்தரகாந்தன் அவர்கள் வயது வந்து ஓய்வுபெற்றாலும், அவரால் சமுதாயம் கல்வித்துறையில் மேன்மேலும் பயனுற அருளும் வண்ணம் எல்லாம்வல்ல கருணாகரப்பிள்ளையாரின் திருவடிகளை மனதில் இருத்திப் பிரார்த்திக்கின்றேன்.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்.
உரும்பிராய். (25001)

இச்சிறப்புமலர் பிரசுரிப்பதற்கு அன்பளிப்புத் தந்தோர் விவரம்:

தாஸ் ஸ்ரோஸ்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

கரன் ரெக்ரைல்ஸ்
பலாலி வீதி,
திருநெல்வேலி.

திருநெல்வேலி ஸ்ரோஸ்
திருநெல்வேலிச் சந்தி.

பா.பாலகுமார்
மரக்கறி விற்பனையாளர்
44, திருநெல்வேலி உட்புறம்.

இ.சிவப்பிரகாசம்
மரக்கறி விற்பனையாளர்
திருநெல்வேலிச் சந்தி.

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த

**யூத்** (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்)

(10854)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சுவலட்சுமி, மந்த்ரா நடித்த **லவ் டுடே** (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்

UNIVERSAL SOLDIER (ஆங்கிலப்படம்)

(C/24617)

## LEO CLUB OF MANIPAY PARISH

We Serve

**தீவக லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும்**

**க.பொ.த. (சாதாரண) மாணவர்களுக்கான**

**பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**

*இடம்:-* யா/புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை

*காலம்:-* 23.11.2002 (சனி)
24.11.2002 (ஞாயிறு)

*நேரம்:-* காலை 9.00

| | | | |
|---|---|---|---|
| *கணிதம்:-* | C.K.B.தயாளன் | *விஞ்ஞானம்:-* | திரு.டார்வின் |
| *தமிழ்:-* | J.தயாபரன் | *ஆங்கிலம்:-* | திரு.பத்மராஜா |
| *சமூகக்கல்வி:-* | E.அன்ரன் | *வர்த்தகம்:-* | K.அற்புதராஜா |

*குறிப்பு:* அனைத்து பாடங்களுக்கும் இலவச மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும்.

தலைவர்,
*தீவக லயன்ஸ் கழகம்* (10849)

தலைவர்,
*மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம்*

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 09 - 1934

மறைவு 02 - 12 - 2001

கைதடி மேற்கைச் சேர்ந்த

### அமரர் ச.சங்கரன்

திதி : 22.11.2002

ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறுமோ எம் நெஞ்சம்
நீர் தந்த சுகங்கள்
இன்பமான சுமைகளே!
ஆனால் இன்று
சுமை தாங்க முடியாது
தவிக்கிறோம் உமை நினைந்து
இறைவனோடு கலந்து விட்டீர்
இறைஞ்சுகிறோம் இங்கிருந்து
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கைதடி மேற்கு, கைதடி.* (10860) - குடும்பத்தினர்.

## லொறியிலிருந்து வீழ்ந்த இளைஞர் உயிரிழந்தார்

ஓடிக்கொண்டிருந்த லொறி திடீரென 'பிறேக்' பிடித்தவேளை லொறியின் பின்பகுதியிலிருந்து வெளியே தூக்கிவீசப்பட்ட ஒருவர் உயிரிழந்தார்.

நுணாவில் கண்டிவீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கடையொன்றில் பணிபுரிபவரான பண்டத்தரிப்பு, பிரான்பற்றைச் சேர்ந்த தம்பிஐயா யோகேந்திரன் (வயது21) என்ற இளைஞரே மரணமானவராவார்.

வியாபாரம் தொடர்பான வேலைக்காக தென்மராட்சிக்குச் சென்றுகொண்டிருந்தவேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் காயமடைந்த இந்த இளைஞர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது நேற்று உயிரிழந்தார். (ஓ-139-5)

## ராஜா யாழ்ப்பாணம்.

3ஆவது வாரம்

அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த

**வில்லன்** (ரீல்ஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)

(C/246..)

## Vacancy for Management Trainee

கொழும்பில் உள்ள பிரபல்யமான நிறுவனத்தின் யாழ்.கிளைக்கு உடனடியாக முகாமைத்துவ பயிலுநர்கள் தேவை. வர்த்தகத் துறைசார் கல்விப் பின்னணி அவசியம். ஆங்கில அறிவும், தமது முன்னேற்றத்தில் அக்கறையும் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் 24.11.2002 அன்று 3.00 மணிக்கு சமுகந்தரவும்.

**IPAS**
*199, Main Street, Jaffna.*

(C/25019)

## தேவை

**Computer Tamil Typing**

தெரிந்த பெண் தேவை. சுய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்:-

**J.T.I.**
இல 07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/25015)

## கோழிக்குஞ்சு விநியோகம்

அச்சுவேலி, பிராந்திய கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட ஒருநாள் பேடு 34/- , சேவல் 2/-, புறொயிலர் 32/- குஞ்சுகள் 23.11.2002 அன்று (சனிக்கிழமை) காலை 9மணிக்கு பண்ணையில் வைத்து விநியோகம் செய்யப்படும். பெறவிரும்புபவர்கள் நேரில் வந்து தொடர்புகொள்ளவும். (10848)

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி | நேரம் | இடங்கள் |
|---|---|---|
| 23.11.2002 | காலை 9.00-பி.ப 4.00 - | புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, அச்செழு, வடமராட்சி. |
| 30.11.2002 | காலை 9.00-பி.ப 4.00 - | காங்கேசன்துறை. |
| 07.12.2002 | காலை 9.00-பி.ப 4.00 - | இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, கோம்பையன்மணல், ஆனைக்கோட்டை, நவாலி. |
| 14.12.2002 | காலை 9.00-பி.ப 4.00 - | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ்.மாநகர சபைப் பகுதி. |
| 21.12.2002 | - | புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சி, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நவாலி, கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய், மருதனார்மடம். |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

**பிரதேச மின் பொறியியலாளர்,**
**இலங்கை மின்சார சபை,**
**யாழ்.பிரதேச அலுவலகம்,**
**சுன்னாகம்.**

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.

(C/25018)

## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் *ஆஸ்துமா, சலரோகம், மூல வியாதி(Piles), உடல்பருமன், முகப்பரு, இளநரை, தலைமுடி கொட்டுதல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும்* எவ்வித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக, குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக் குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**Dr.R.K.நவனீதன்** DYNS:SMP:NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
யாழ்.உல்லாச பயணியர் விடுதி
இல.54, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

(10857)

முகாம் நடைபெறும் நாள்கள்
நவம்பர் 22, 23, 24, 25ஆம் திகதிகள்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரத்தினம் சிவபாக்கியலக்சுமி

யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் சிவபாக்கியலக்சுமி 20.11.2002 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பு கனகரத்தினம் (ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் மற்றும் கனகரஞ்சினி, கனகரஞ்சன் (கனடா), கனகபாலன் (கனடா), கனகரமணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான வரதராஜா (ஓய்வுபெற்ற கடற்படை உத்தியோகத்தர்), தியாகராஜா (ஜேர்மனி) மற்றும் தனபாக்கியலக்சுமி (வவுனியா), செல்வராஜா (கிளிநொச்சி), பூபாக்கியலக்சுமி (டென்மார்க்), ஆனந்தராஜா (வீதி அபிவிருத்தி அதிகாரசபை), ராஜரஞ்சினி (யாழ்.), இரசநாயகம் (லண்டன்), ஜெயரஞ்சினி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் சிவமலர் (கனடா), தங்கேஸ்வரி (கனடா), வைத்திலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரேணுகா, சுகுந்தன், மேனகா, சுதர்சன், ராஜிதா, பாணுஜன், வினோஜன், ரேணுஜன், அஜந்தன், நிரோஜன், நிலோஜன், அஜித்குமார், அக்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2002) சனிக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*234/6, செபஸ்ரியார் ஒழுங்கை,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.* (10859)

தகவல்:
தம்பு கனகரத்தினம்
(கணவர்)

## இரத்தினம் பொன்னுத்துரை

**(இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் - சி.ஐ.டி)**

சாவகச்சேரி, கற்குழியைப் பிறப்பிடமாகவும் பதுளையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பொன்னுத்துரை அவர்கள் 20.11.2002 அன்று பதுளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தையல்நாயகியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமானந்தன், புஸ்பரத்தினம், சதானந்தன், அருளானந்தம், விவேகானந்தன், காலஞ்சென்ற புஸ்பறஞ்சினி மற்றும் புஸ்பராதா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவராசரத்தினம், செல்வராணி, தனேஸ்வரி, யசோதரா, சிவம் லோகநாதன் ஆகியோரின் அருமை மாமனாரும், மயூரன், பிரபுதாசன், வித்தியா, தீபா, வதனா, கோகுலன், ஜினிரா, கோபி, பிவன், பரன், ரூபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இல.42/3, கிளினிக் வீதி, யாப்பனாவத்தை, பதுளை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பதுளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(தொலைபேசி இலக்கம் : 072-558374/055-29212)

தகவல்:
பொ. விவேகானந்தன் (மகன்)
திருமதி யசோதரா விவேகானந்தன் (மருமகள்)
(ஆசிரிய ஆலோசகர் - நடனம், தென்மராட்சி வலயம்)

(C/25014)

## தேவசகாயம்பிள்ளை பிரான்சிஸ் தேவராஜா

**(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல. 98, வேம்படி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம்பிள்ளை பிரான்சிஸ் தேவராஜா அவர்கள் 20.11.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம்பிள்ளை (தெல்லிப்பழை) - ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செபநாயகம் றெஜினோல்ட் மற்றும் அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், பிரான்சிஸ்கா அரியமலர் (நங்கி) அவர்களின் அன்புக் கணவரும் அனிட்டா கிருசாந்தினியின் (திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்) அன்புத் தகப்பனும் திருமதி குமாரகுலசிங்கம், காலஞ்சென்ற றீற்றா தேவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமிர் அன்ரனி (ஆசிரியர்), ஜெயபிரியா (ஆசிரியர், பாலிநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அரசரட்னம் (பிரான்ஸ்), ஜெயரட்ணம் (கோல்டன் ஈக்கிள் பாதுகாப்பு உத்தியோகத்தர்), விஜயரட்ணம், செல்வரட்ணம் (பிரான்ஸ்), குணரட்ணம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.11.2002) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து அடைக்கலமாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*98, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10867)

தகவல்
திருமதி தேவராஜா (மனைவி)

# புதிய படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவுசெய்யப்பட்ட குழுவின் கூட்டதில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருககிறது.

படை அதிகாரிகள் - விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிக்கும் இக்குழுவின் கூட்டம் நேற்று முற்பகல் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்றது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற்பிரிவின் யாழ்.மாவட்ட உப-தலைவர் பேக் சாண்டர் எஸ்கார்விக் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் படையினர் தரப்பில் யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி சரத் பொன்சேகா, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கரலியத்த, லெப்.கேணல் சில்வா, பிரிகேடியர் உபாலி எதிரிசிங்க ஆகியோரும் விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ நிர்வாகசேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், வடமுனை கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த லெப்.கேணல் அறிவு, அரசியல்துறைப் பிரமுகர் அருணன், கடற்புலிகளின் வலிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை - நாகர்கோயில் வீதியைத் திறப்பதற்காக புதிதாக சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கு இடம்பற்றாக்குறை உள்ளது. அத்துடன் வீதியைச் செப்பனிடவேண்டிய தேவையும் உள்ளது என்று படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பாதை திறக்கப்படவேண்டியதன் அவசியத்தை தரவு ரீதியான விளக்கங்களுடன் புலிகள் எடுத்து விளக்கினர்.

அவை வருமாறு:-

- நாகர்கோயிலுக்கு அப்பால் செம்பியன்பற்றுத் தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான 10 கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 12 ஆயிரம் மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள தமது சகல தேவைகளுக்கும் பருத்தித்துறை நகருக்கே சென்று வர வேண்டியுள்ளது.
- 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையும் மக்கள் பாவனைக்குத் திறந்திருந்த இந்த வீதியானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பும் மூடப்பட்டிருப்பதை நியாயப்படுத்த முடியாது.
- மருதங்கேணிப் பகுதியில் பணியாற்றும் வேறு இடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்கள் தினமும் பயணஞ்செய்வதற்குச் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் அதிக நேரத்தையும் தமது பயணத்திற்குச் செலவிட வேண்டியுள்ளது.
- சுமார் 2ஆயிரம் மீனவர் குடும்பங்கள் தமது கடலுணவுகளை சந்தைப்படுத்தமுடியாத நிலை உள்ளது.
- 'நிக்கொட்' அமைப்பினால் இப்பிரதேச அபிவிருத்திக்கென 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதும் அதைப் பயன்படுத்த முடியாதநிலை உள்ளது. (கட்டப் பொருள்களை எடுத்துச் செல்லக்கூடிய வசதி இல்லை.)

இவை போன்ற பல்வேறு தேவைகள் கருதி மேற்படி வீதி உடனடியாகத் திறக்கப்பட வேண்டும். வீதியைத் தொடர்ந்தும் மூடிவைத்திருந்தால் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பன தடைப்பட நேரிடும். இதுவும் ஒரு மனித உரிமை மீறலாகும் - என்று விடுதலைப் புலிகள் தரப்பினரால் எடுத்துக் கூறப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பி.வேலாயுதபிள்ளையும் கலந்துகொண்டார்.

படைத்தரப்பினாலும் விடுதலைப் புலிகளினாலும் முன்வைக்கப்பட்ட விடயங்கள் அடுத்த மாதம் 14 ஆம் திகதி ஓமந்தையில் நடைபெறவுள்ள உபகுழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ஐ-3-10-8)

# ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பாக விடுத்த ஓர் அறிக்கையில் தங்கள் கட்சியின் சாவகச்சேரி அலுவலகத்தில் இருந்த பிரதேச சபைத் தலைவர் உட்பட இருவர் காணாமற்போயிருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளது.

இனந்தெரியாத இருபது பேர் கொண்டகுழு இரவு 12.15 மணிக்கு தமது அலுவலகத்துக்குள் புகுந்து ஆறு பெற்றோல் குண்டுகளை வீசியதாகவும் -

இதனால் அலுவலகத்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது என்றும -

பொலீஸ் குழு ஒன்று அங்கு சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதும் தாக்குதல் நடத்திய குழுவினர் ஓடிவிட்டனர் என்றும் -

ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்திய சமயம் அந்த அலுவலகத்தில் இருந்த கட்சி உறுப்பினர்களான வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் மற்றும் சந்திரன் ஆகியோர் காணாமற்போய்விட்டனர் என்றும் - ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது. (ஐ-3-31-173)

# ஈ.பி.டி.பி. தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையில் வெகுஜன அமைப்புக்களின் ஆதரவோடு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகவே யாழ்நகரில் உள்ள ஈ.பி.டி.பி. தலைமையகம் முன்பாக நேற்று மறியற்போர் நடத்தப்பட்டிருக்கிறது.

யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து மினிவான்களில் வாகனப் பேரணியாக - பருத்தித்துறை வீதியூடாக -ஆரியகுளம் சந்தியைச் சென்றடைந்த மக்கள், அங்கிருந்து ஸ்ரான்லி வீதியில் ஸ்ரீதர் தியேட்டரில அமைந்துள்ள ஈ.பி.டி.பி. தலைமையகம் முன்பாகத் திரண்டனர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாக ஒன்றுகூடிய மாணவர்களும் பொதுமக்களும் ஈ.பி.டி.பியை குடாநாட்டிலிருந்து வெளியேறக் கோரும் கோஷங்களை எழுப்பினர்.

### கலகம் அடக்கும் பொலீஸார் குவிப்பு

இந்த எதிர்ப்புப் போராட்டங்களின் போது வன்முறைகள் வெடிக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் முற்கூட்டியே ஈ.பி.டி.பி. தலைமையகத்தின் உள்ளேயும் வெளியிலும் கலகம் அடக்கும் பொலீஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர். போதாக்குறைக்கு அதிரடிப்படையினர் பலருங்கூட அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும், எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோர் அமைதியான முறையில் நடந்து கொண்டதால் வன்முறைகள் எதுவும் நேற்று இடம்பெறவில்லை. பிற்பகல் 1.30 மணிவரை மறியல் போராட்டம் நடந்தது.

போராட்டம் முடிவுறும் நேரத்தில் அங்கு வருகைதந்த கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் ஒலே புரொண்டம், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். குடாநாட்டிலிருந்து ஈ.பி.டி.பி. முற்றுமுழுதாக வெளியேறும் வரை தமது எதிர்ப்பு நடவடிக்கை தொடரும் என்று ஒன்றியப் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுத் தலைவருக்குத் தெரியப்படுத்தினர்.

இவ்வாறான போராட்டங்களின் போது பொதுமக்களை வன்முறையில இறங்கிவிடாமல் பார்த்துக் கொள்ளுமாறு கண்காணிப்புக்குழுத் தலைவர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் தமக்கு அரசு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புக்களால் வரையறுத்து வழங்கப்பட்டிருக்கும் கடமைகளில் மட்டுமே தாங்கள் ஈடுபடமுடியும் என்றும் -

அதற்கு அப்பாற்பட்ட விடயங்களில் தலையிடும் அதிகாரங்கள் தமக்கு இல்லை எனவும் -

கண்காணிப்புக்குழுத் தலைவர் புரொண்டம் அங்கு தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ்நகரில் மறியற்போராட்டம் நடைபெற்ற வேளையில் சாவகச்சேரியில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் முன்பாகவும் பொதுமக்கள் வாகனங்களில் சென்று இறங்கி மறியல் செய்ய முயன்றனர். எனினும், பொலீஸார் தலையிட்டதால் அங்கு போராட்டம் நடைபெறவில்லை (ஐ-3-4-10-6-31-86-173)

# ஒஸ்லோ மாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கம் கலந்துகொள்வது தொடர்பாக எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்டிருக்கும் சர்ச்சைகள் குறித்து கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர்மேலும் கருத்துக் கூறியதாவது:-

வெறுமனே வெளிநாடுகளிடம் கையேந்தும் ஒரு கூட்டமாக ஒஸ்லோ மாநாடு அமையாது. அது அடிப்படையில் ஓர் உயர்மட்ட அரசியல் கூடடம். இதன் மூலம் எமது நாடு பற்றிய உறுதியான அரசியல் செய்தி ஒன்று உலக நாடுகளுக்கு விடுக்கப்படும்.

வடக்கு - கிழக்கு குறித்த விடயங்கள் முழு நாட்டிற்கும் பொதுவான விடயங்கள். மற்றும் பொதுவான கலந்துரையாடல்கள் என்று இம்மாநாட்டில் மூன்று சுற்றுக்கள் இடம்பெறவுள்ளன.

வடக்கு - கிழக்கு குறித்த மாநாட்டில் பேசப்படும்போது புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். இதனை நடைமுறை ரீதியாகப் பார்க்கவேண்டும். இப்பிரதேசங்கள் பற்றிப் பேசும்போது புலிகளின் பிரதிநிதித்துவம் அவசியமாகின்றது.

அத்தியாவசிய அவசர விடயங்கள் சிலவற்றிற்காக தற்போது உதவி பெறப்படும். அந்த உதவி கட்டுப்படுத்தப்பட்ட ஒரு தொகையாக இருக்கும்.

20 நாடுகளின் அரசியல் பிரமுகர்கள் பங்கேற்கும் இந்த மாநாட்டில் பிரதமர் ரணிலும் நோர்வே பிரதமரும் ஆரம்ப உரை நிகழ்த்தவுள்ளனர்.

- இவ்வாறு அவர் கூறினார்.(ஐ-3-12)

# பிரபாவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இயக்குநர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் புலிகளின் தலைவர் கூறும் கருத்துக்களை நாட்டுமக்கள் அறிந்து கொள்வது சமாதான முயற்சிகளில் நல்லதொரு படிக்கல்லாக இருக்குமென்று அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ-12)

# மாவீரர்....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் போராளிகள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லப்பொறுப்பாளர் கோமகன, கொடிகாமம் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஈஸ்ரர் ஆகியோர் ஈகச் சுடரேற்றினர்.

அகவணக்கம், மலர்வணக்கம் என்பனவற்றைத் தொடர்ந்து தென்மராட்சிப் பிரதேச கொள்கை முன்னெடுப்புப் பிரிவு பொறுப்பாளர் ஸ்ரீநாத் நினைவுரையாற்றினார். (ஐ-4-5-17-15-74)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
25
-
01
-
1936



மறைவு
09
-
10
-
2002

### திருமதி
### சிவபாக்கியம் குமாரசாமி

பாசத்தின் திருவுருவமே! எம்
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்புடன் எம்மை அரவணைத்துப்
பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி
எங்கள் இதயங்களில் குடியிருக்கும்
அன்புத் தெய்வமே!
வார்த்தை ஒன்று கூடச் சொல்லாமல்
எம்மை விட்டுப் பறந்தோடிச்
சென்றதெங்கே?
உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு ஒருபோதும் அகலாது!
என்றும் உங்கள் நினைவுடன் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
த.குமாரசாமி அன் சன்ஸ்.

(10876)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
11
-
11
-
1928



உதிர்வு
23
-
10
-
2002

### அமரர் கனகசபை பினாகபாணி

திதி : ஐப்பசி அபரபக்க துதியை 22.11.2002

மண்ணில் பண்பு, பாசம், கடமை, கட்டுப்பாடு யாவற்றையும் பேணி, எழுத்தறிவிக்கும் ஆசானாக வாழ்ந்தீர். உழவுத் தொழிலில் வங்காட்டி அதற்கு வந்தனை செய்தீர். இவ்வாழ்க்கை இறைவன் கொடுத்தவரம் என மன நிறைவுடன் வாழ்ந்தீர். பாமரர்களின் நண்பனாய் வாழ்ந்த நீர் திடீரென இறைவனடி சேர்ந்துவிட்டீர். திடீர் மறைவு எல்லோரையும் துயரில் ஆழ்த்தியுள்ளது. இருப்பினும் மாண்டவர் மீளார் என தம் மனைத்தேற்றி இன்று உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(10787)

## மரண அறிவித்தல்கள்

### பேதுரு பாவிலுப்பிள்ளை

இத்தாவில், பளையை வசிப்பிடமாகக் கொண்ட பேதுரு பாவிலுப்பிள்ளை அவர்கள் நேற்று (21.11.2002) வியாழக்கிழமை ஆனைக்கோட்டையில் இறைபதமடைந்தார்.

அன்னார் லோறன்சியாவின் அன்புக் கணவரும் லூர்துமலர், அருட்சகோதரி ஜெயசீலி (செபமாலைக் கன்னியர்மடம்), மாக்கிறெட், அல்பிரெட், மனோகரசீலி, கொலஸ்ரிக்கா, அருட்சகோதரி பேணடேற் (செபமாலைக் கன்னியர்மடம்), ஜோர்ஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மைக்கல் இராசையா, இம்மானுவேல், வரப்பிரகாசம், பத்திநாதர் சாராஜெயமலர், வதனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் உடல் பேழை நல்லடக்கத்திற்காக இன்று (22.11.2002) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய காக்கைதீவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
இத்தாவில்,
பளை.

தற்காலிக முகவரி:
குருசுமதவடி லேன்,
ஆனைக்கோட்டை. (10870)

தகவல்:
ஆ.வரப்பிரகாசம்
(மருமகன்)

### அப்பாச்சாமிஐயர் அன்னாசாமிஐயர்

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த அப்பாச்சாமி ஐயர் அன்னாசாமிஐயர் நேற்று (21.11.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் லட்சுமிஅம்மாவின் அன்புக் கணவராவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2002) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, துன்னாலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (C/25020)

தகவல்:
மனைவி,
பிரேமச்சந்திரக்குருக்கள் (மகன்)


## கணக்கீடு

A/L 2004
வங்கி கணக்கிணக்கச்சுற்று
ஆரம்பம் : நாளை (23.11.2002)
2.00 p.m
ஆசிரியர் - S.தவா
B.Com (Hons), Acc.Dipl
New Science College
Jaffna

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்.
2004 A/L
பௌதிகவியல்
MECHANISM (பொறியியல்)
BY: சந்திரப்பிரகாஷ் (எஸ்.ஏ.)
சனி, ஞாயிறு 9-10 a.m.
(10838)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.